# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 9 (23-03-1998) திங்கட்கிழமை UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 99


# 1,500 தமிழர்கள் கொழும்பில் சுற்றிவளைப்பில் கைதாகினர்

கொழும்பு, மார்ச் 23

கொழும்பு நகரில் முன்எப்போதும் இல்லாதவாறு நேற்று வரை படையினர் மேற்கொண்ட தேடுதலில் வயது வேறுபாடின்றி சுமார் ஆயிரத்து 500 பேர் கைது செய்யப்பட்டனர்.

படையினரும், பொலீசாரும் இணைந்து கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடை, புறக்கோட்டைப் பகுதியில் உள்ள 15 லொட்ஜுகளையும் தமிழர் வீடுகளையும் சுற்றிவளைத்து நடத்திய தேடுதலின் போதே இவர்கள் கைதாகினர்.

கைதானவர்கள் கொட்டாஞ்சேனை கரையோரப் பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தலையாட்டி முன் நிறுத்தப்பட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் மோதல்!

வவுனியா, மார்ச் 23

மட்டக்களப்பு வவுணதீவுக்கும் — சிறுவாமுனைக்கும் இடையில் விடுதலைப்புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதலில் தமது உறுப்பினர் ஒருவரும், ஆதரவாளர் ஒருவரும் உயிரிழந்ததாக புலிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் கன்னங்குடாவில் 3 பொதுமக்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-164-3)

# இனப்பிரச்சினைகுறித்து அரசை பேச வைத்தவர்கள் புலிகளே!



அப்ப காசைக் கொடுத்து கசையடி வாங்கி! இருக்கினம்...!

## தொண்டமான் பேட்டி

கொழும்பு, மார்ச் 23

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான பேச்சுவார்த்தையை நடத்த அரசாங்கம் தற்பொழுது நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்குக் காரணம் விடுதலைப் புலிகள் அன்றி தமிழ்க் கட்சிகள் அல்ல. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழ்க் கட்சிகள் எதுவுமே செய்யவில்லை. இனப்பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கத்தைப் பேச வைத்த ஒரே ஒரு கட்சி தமிழீழ விடுத்லைப் புலிகளே.

மேற்கண்டவாறு கொழும்பு ஆங்கில வார இதழ் சண்டே லீடருக்கு அளித்த பேட்டியில் கால்நடை அபிவிருத்தி பெருந்தோட்டத் துறை பொது வசதிகள் அமைச்சரும் இ. தொ. கா. தலைவரு

(10 ஆம் பக்கம் பார்க்க)



தொண்டமான்

## தாக்குதல்

வெற்றி உறுதி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் வடக்கில் இனங்காணப்பட்ட விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களை நடத்தி உள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் படையினர் சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

# ஜே. வி. பி. மீண்டும் தலை தூக்கினால் கடும் நடவடிக்கை எடுப்போம்

## அனுருத்த ரத்வத்த எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 23

''ஜே. வி. பி. இயக்கத்தினர் தமது பாதகச் செயலை மீண்டும் ஆரம்பித்தால் அதற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும்''

இப்படி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த எச்சரிக்கைவிடுத்தார்.

வெள்ளவாயா, ரந்தினிகல ஆகிய கிராமிய மின் விநியோகத் திட்டங்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விரைவில் யுத்தம் முடிவடைந்ததும் வடக்கிலும் தெற்கிலும் உள்ள மக்கள் நிம்மதியாகவும் சுபீட்சமாகவும் வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்றும் பிரதி அமைச்சர் கூறினார்.

சமீப காலமாக தெற்கில் ஜே. வி. பியின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவது தெரிந்ததே. (இ-9)

# பென்ஸ் காரால் என்னை விலைக்குவாங்கமுடியாது!

## தேரர் கூறுகிறார்

''எனக்கு 10 பென்ஸ் கார்கள் வழங்கினாலும் அதிகாரப்பரவலாக்கல் யோசனைககு எதிரான எனது நிலைப்பாட்டில் மாற்றம் இருக்காது.''

இப்படி மல்வத்த மகாநாயக்கர் வண. ரம்புக்கவெல ஸ்ரீவிபாசிதேரர் தெரிவித்தார்.

கண்டியில் ஜனாதிபதியின் இல்லத்தில் மகாநாயக்கருடன் ஜனாதிபதி இரு மணித்தியாலங்கள் பேச்சு நடத்திய பின்னர் 34 லட்சம் ரூபா பெறுமதியான பென்ஸ் கார் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியிருந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# 117 வெளிநாட்டவருக்கு சிறையும் கசையடியும்!

## சிங்கப்பூர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, மார்ச் 23

சிங்கப்பூருக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததுக்காக 117 வெளிநாட்டவர்களுக்கு சிறைத் தண்டனையும் கசையடியும் வழங்க அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வரப்பிரகாஷ் கொலை வழக்கில் எதிரிகள் ஏழு பேருக்கும் பிணை!

கொழும்பு, மார்ச் 23

பேராதனை பல்கலைக் கழக பொறியியல்பீட மாணவன் வரப்பிரகாஷ் கொலை வழக்கின் எதிரிகள் ஏழு பேரையும் கண்டி உயர் நீதிமன்ற நீதிவான் நிஸ்ஸங்க உதலாகம பிணையில் செல்ல அனுமதித்தார்.

கடந்த அக்டோபர் மாதம் 6 ஆம் திகதி வீடொன்றில் வைத்து பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட முதல் வருட மாணவனான எஸ். வரப்பிரகாஷ் (வயது 21) பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட மாணவர்கள் சிலரால் பகிடி வதைக்கு ஆளாகி சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அக்டோபர் மாதம் 26ஆம் திகதி மரணமடைந்தார்.

இதையடுத்து பேராதனை பொலீஸார் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொறியியல்பீட மாணவர்கள் கரன், எஸ். துளசிகாந்தன், எம். தயாளன், பி. அமுதன், கே. பி. குமரன், எல். கே. ரூபன், ஆர். குமரேஷன் ஆகிய ஏழு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# குண்டு பொருத்திய மோட்டார் சைக்கிள்

## சோதனையில் சிக்கியது

கொழும்பு, மார்ச் 23

மட்டக்களப்பில் இருந்து வெடிமருந்து பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை கொழும்புக்கு எடுத்துச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பண்டிதர் கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த பண்டிதர் கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை 21-03-1998 இல் இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி

கல்வயல்,
சாவகச்சேரி.

(சி/3180)

## இராமலிங்கம் இராசையா

நாயன்மார்கட்டைச் சேர்ந்த இராமலிங்கம் இராசையா நேற்று (22-3-98) காலமானார்.

இவர் தங்கலட்சுமியின் அன்புக் கணவரும், குணசிங்கம், குகதாசன் (K. K. A. K.), கருணாநிதி (கண்ணன் களஞ்சியம்), காலஞ்சென்ற காண்டீபன், அச்சுதன் (ஜேர்மனி), விசாகன் (V. T. கல்வியங்காடு), குணாளன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மயூரவதனி, புவனேஸ்வரி, விமலாதேவி (ஜேர்மனி), சந்திரலீலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 74/127 இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டில் உள்ள இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக இன்று (23 - 3 - 98) காலை 10.30 (பழைய நேரம்) மணிக்குச் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
இராசையா குகதாசன்

நாயன்மார்கட்டு.

(54249)

## திருமதி இந்திரா மகாதேவா

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரா மகாதேவா காலமானார்.

அன்னார் பிரபல ஜோதிடர் இ. மகாதேவா (மகாதேவா ஜோதிடம்)வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராஜேந்திரா, மகாராஜி (யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீட மாணவி), விஜிதா, கிருஷ்ணராஜ் (பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (23 - 03 - 98) நடைபெற்று பூதவுடல் பகல் 10 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகிறீர்கள்.

தகவல்:
இ. மகாதேவா

140, செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## திருமதி அற்புதராணி ராஜசிங்கம்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அற்புதராணி ராஜசிங்கம் 18 — 03 — 1998 இல் கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற M. S. ராஜசிங்கம் (முன்னாள் பதிவாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், கமலசாந்தினி, வசந்தமாலினி, ராஜன், சிறி, அருணா, மல்லி, எல்லாளன் ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 21— 03 — 1998 அன்று கனடாவில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கிருபா நவரத்தினம்
(பெறாமகன்)

"ரத்ன வாசா",
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(54246)

## கதிரிப்பிள்ளை செல்வரட்ணம்

ஈவினையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இல. 4, செட்டித்தெரு நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவருமான கதிரிப்பிள்ளை செல்வரட்ணம் 21- 3- 98 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை தங்கமுத்துவின் மூத்த மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன் (டோகா), யசோதரா, பகீரதன் (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), பகீரதி, சியாமளா (நோர்வே), மோகன்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவரதி, ஜெயக்குமார் (City Tex நல்லூர்), றதி, நேசன், சூரியபாலன் (நோர்வே), சுபாசினி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற செல்லம்மா (சிங்கப்பூர்) மற்றும் குணரட்ணம் (Accountant, கனடா) ஆகியோரின் சகோதரரும், சிவசைலஜா, புவிகரன், கம்சா, கோகிலன், நவநீதன், ஜனேஸ், டிலக்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (22- 03- 98) இல. 4, செட்டித்தெரு நல்லூரில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
ஜெயக்குமார்,

சிற்றி ரெக்ஸ்,
இல. 4, செட்டித் தெரு,
நல்லூர்.

(54245)

# நாடாளுமன்ற பகிஷ்கரிப்பை கைவிடுவதா? இல்லையா?

## ஐ.தே.க. மத்திய குழு தீர்மானிக்கும்

கொழும்பு, மார்ச் 23

எதிர்வரும் ஏப்ரல் 7 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பங்கு பற்றுவதா இல்லையா என்பது குறித்து இவ்வாரம் நடைபெறவுள்ள ஐ. தே. க. மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

ஐ. தே. க. பொதுச் செயலாளர் காமினி அத்துகோரளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனநாயகம் இன்மை, வன்முறை, கலாசாரம் போன்றவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 3 ஆம் திகதி முதல் ஐ. தே. க. நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்து வருவது தெரிந்ததே.

எதிர்வரும் 7 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கட்சி உறுப்பினர்கள் பங்கு பற்றுவார்களா எனக்கேட்டபோதே அத்துகோரளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது கட்சி எம். பி களில் பலர் நாடாளுமன்றத்தைத் தொடர்ந்தும் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கருத்தையே கொண்டுள்ளனர். எனவே இது தொடர்பாக கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே ஆராயவுள்ளோம்.

எமது கட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்ட மாற்றுயோசனையின் மூன்றாவது பகுதியினை ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம். இதில் அரசமைப்பு முறை, அதிகாரப் பகிர்வு அலகு, மாகாண காணி அலகு, பொலீஸ் அதிகாரம், வெளிநாட்டு மூலதனம் என்பன தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது — என்று அவர் தெரிவித்தார். (ஐ-10)

## மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 23

ஏழாலை மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெற உள்ளது.

அதிபர் சு. தம்பித்துரை தலைமையில் நடைபெற உள்ள இந்தப் போட்டிகளில் சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா முதன்மை விருந்தினராகவும் சட்டத்தரணி க. அரியநாயகம், ஏழாலை மத்தி கிராம அலுவலர் இ. சுப்பிரமணியம், பருத்தித்துறை நீதிமன்றப் பதிவாளர் அண்ணா இராஜேந்திரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், பாடசாலையில் ஓய்வு பெற்ற பிரதிஅதிபர் திருமதி கந்தசாமி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-9)

## 3,500 பெண்களுக்கு வெளிநாட்டு வேலை

சிங்கப்பூர், மலேசியா, கட்டார், குவைத் மற்றும் லெபனான் ஆகிய நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாகப் பணிபுரிய சிறிலங்காவைச் சேர்ந்த 3 ஆயிரத்து 500 பெண்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூர் மற்றும்மலேசியாவில் பணியாற்றவுள்ள பெண்களுக்கு ஆங்கில அறிவு அத்தியாவசியமாகும்.

இந்நாடுகளில் பணியாற்றத் தெரிவு செய்யப்படும்பெண்களுக்கு மாதமொன்றுக்கு 7 ஆயிரத்து 500ரூபாவுக்கு மேலாக சம்பளம் வழங்கப்படும் எனவும் —

இப்பெண்களுக்கு விசேட முற் பயிற்சி, பாதுகாப்புறுதி மற்றும் பாதுகாப்பு ஆகியன வழங்கப்படும் என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## பிரதி அமைச்சர்களின் பொறுப்புகள் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 23

அமைச்சுக்களின் கீழ்வரும் திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யும் பொறுப்பை உடனடியாகப் பிரதி அமைச்சர்களிடம் கையளிக்கும்படி அமைச்சரவை உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி எழுத்து மூலமாகத் தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திப் பிரதி அமைச்சர் மகிந்த விஜேசேகராவின் விசேட கோரிக்கையை அடுத்தே ஜனாதிபதி இந்தக் கட்டளையைப் பிறப்பித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

அமைச்சுக்களின் கீழ் செயற்படும் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் தொடர்பாக கொள்கை முடிவெடுக்கும் அதிகாரங்கள் உட்பட அதிகாரங்களைப் பிரதி அமைச்சர்களிடம் கையளிக்கும்படி ஜனாதிபதி அமைச்சர்களைப் பணித்துள்ளார். (இ-10)


நெல்லியடி
**மஹாத்மா**
வெண் திரையில்
23 - 03 - 98 முதல்
ரஜனி, மீனா
நடித்த
**எஜமான்**
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2756)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
ஜனத்திரளுடன் தொடர்ந்து காட்சி அளிக்கிறது எல்லோரும் பார்த்து மகிழ வேண்டிய குடும்பச் சித்திரம்.
தவற விடாதீர்கள்.
மோகன் - பூர்ணிமா, ஜெய்சங்கர், பாலாஜி, சுஜாதா, மனோரமா
நடித்த
**'விதி'**
நேரம்:- 10-30, 2-30
(54075)

யாழ்.
**றீகல்** வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
இன்று முதல்
கார்த்திக், நக்மா, கவுண்டமணி
நடித்த
[illegible]
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
(54250)

**NOTICE**
**The Old Girls' Association**
of
**Chundikuli Girls' College**
Owing to unavoidable circumstances the Variety Entertainment will not be held on 24 - 03 - 1998. The date will be notified later.
Old Girls' Association.
(C/3183)


## சென். ஜோன்ஸ் - சென்ட்ரல்

இரிக்கெட் போட்டியை ஒட்டிய

## புதிர்ப்போட்டி முடிவுகள்

முதலாம் பரிசு:- இல. **1315**
— பி. மல்லிகாதேவி,
77/1, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு:- இல. **1350**
— ஜி. பற்றிக்,
365, கோயில் வீதி,
நல்லூர்.

மூன்றாம் பரிசு:- இல. **225**
— கே. ரி. நடராசா,
12, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றோர் **26—03—98** வியாழக்கிழமை மாலை 4. 30 மணிக்கு தமது பரிசுகளை யாழ். மத்திய கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம்.

புதிர்ப் போட்டிக்கானகுழு,
சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம்.

செ. விமலதாசன்,
இல. 29, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/8184)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தூதர் புதுடில்லி வருவார்

புதுடில்லி, மார்ச் 23

இந்தியாவில் புதிய அரசு அமைத்துள்ள பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயையும் ஏனைய தலைவர்களையும், சந்தித்துப் பேச்சு நடத்துவதற்காக அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் தனது பிரதிநிதி ஒருவரை புதுடில்லிக்கு அனுப்பவுள்ளார்.

ஐ. நாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதியான பில் ரிச்சர்ட்சனே கிளின்ரனின் தூதராக அடுத்த மாதம் இந்தியா வரவுள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான புதிய அரசாங்கத்துக்கும் கிளின்ரன் நிர்வாகத்துக்கும் இடையே நல்லுறவைவளர்த்துக் கொள்ளும் முயற்சியாகவே அமெரிக்கா இந் நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது.

அதிபர் பில் கிளின்ரன் நேற்று முன்தினம் பிரதமர் வாஜ்பாயுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார். அச்சமயம் தமது பிரதிநிதியை புதுடில்லிக்கு அனுப்பவுள்ளதான தகவலை அவர் பிரதமருக்குத் தெரிவித்ததாக பி. ரி. ஐ. செய்தி தெரிவித்தது. [ஐ]

## த. மா. கா. நிர்வாகிகள் ராஜினாமா

சென்னை, மார்ச் 23

நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தலில் தமிழ மாநில காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவுக்குத் தார்மீகப் பொறுப்பேற்று அக்கட்சியின் நிர்வாகிகள் 24 பேரும், மாவட்டத்தலைவர்கள் 36 பேரும் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர்.

கட்சியை மறுசீரமைப்புச் செய்யும் தலைவர் மூப்பனாரின் முயற்சிக்கு வழிவிட்டு இவர்கள் பதவி துறந்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட 20 இடங்களிலும் த. மா. க. வெற்றியீட்டியிருந்தது. ஆனால் இம்முறை போட்டியிட்ட 20 தொகுதிகளில் மூன்று இடங்களில் மட்டுமே வெற்றியீட்டியது. (ஐ)

## இந்தியச் செய்திகள்

# தி.மு.கவுக்கு பொன்விழா; கருணாநிதிக்கு பவளவிழா



சென்னை, மார்ச் 23

தி. மு. கவின் பொன்விழா இவ்வாண்டு செப்ரெம்பர் 7 ஆம் திகதி தொடங்குகிறது. பொன் விழாவின் நிறைவு விழா 1999 செப்ரெம்பரில் கொண்டாடப்படும்.

பொன் விழா கொண்டாடப்படும் 1999 இல் முதல்வர் கருணாநிதியின் பவள விழாவும் கொண்டாடப்பட உள்ளது.

தற்போது தி. மு. கவில் உறுப்பினராகச் சேரும் அனைவரும் 'பொன் விழா அண்ணா உறுப்பினர்' என அழைக்கப்படுவார்கள்.

இத்தகவல் தி. மு. க வின் தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளரான கல்வி அமைச்சர் க. அன்பழகன் முன்மொழிந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் கருணாநிதியின் தலைமையில் நடைபெற்றது. (ஐ-10)

# பிராந்திய பாதுகாப்புக்கு கடினமான தீர்மானங்களை எடுக்க நேரிடும்

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சர்

புதுடில்லி, மார்ச் 23

இந்தியாவின் பாதுகாப்பிற்கு அவசியம் ஏற்பட்டால் மட்டுமே அணு ஆயுதம் பயன்படுத்தப்படும் என்று புதிய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு என்பது சாதாரண விடயம் அல்ல; பிராந்தியத்தின் பாதுகாப்புக் கருதி கடினமான தீர்மானங்களை எடுக்கவேண்டி நேரிடலாம். அவ்வாறான சூழ்நிலையில் அதற்கான கால கட்டம் எதனையும் குறிப்பிட முடியாது. இந்தியாவின் பாதுகாப்பு உறுதியாக உள்ளது. அணு ஆயுதம் தயாரிக்கும் வல்லமையும், தொழில் நுட்பமும் இந்தியாவிடம் இருப்பது உலகறிந்த விடயம். அதற்காக நாம் அணுஆயுதப் பரிசோதனை நடத்த வேண்டிய அவசியம் இல்லை— என்றும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார். (ஐ-ரீ)

## வாஸ்து சாஸ்திரப்படி கட்டப்படாத

# நாடாளுமன்றத்தின் அமைவிடம் இந்தியாவுக்குப் பொருத்தமில்லை!

## 'அஜய் பாரத்' கட்சி கருத்து

புதுடில்லி, மார்ச் 23

இந்திய நாடாளுமன்றக் கட்டடம் வாஸ்து சாஸ்திர முறைப்படி கட்டப்படாததால் தான் நிலையற்ற அரசுகள் மத்தியில் அமைகின்றன.

''அஜய் பாரத்'' கட்சியின் தலைவர் சந்தோஷ் சிங் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இப்போதைய நாடாளுமன்றக் கட்டடம் வட்ட வடிவில் இருக்கிறது. இதை பிரிட்டிஷார் கட்டினர்! இந்நாட்டு மக்களை ஜாதி, மத, இன, மொழி அடிப்படையில் பிரித்து வைத்து தந்திரமாக ஆண்ட பிரிட்டிஷார், தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளத்தான் நாடாளுமன்றத்தைப் பயன்படுத்தினர்.

பிறகு ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் அதே பாணி

8 ஆம் பக்கம் பார்க்க

# கருணாநிதி பதவி துறக்க வேண்டும்

## ராமதாஸ் கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 23

தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை மோசமடைந்து வருவதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்று முதலமைச்சர் மு. கருணாநிதி பதவி விலக வேண்டும். இப்படி பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். இராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம்சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய அவர், தமிழ் நாட்டில் இடம்பெற்றுவரும் பரவலான குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு கருணாநிதி மீது குற்றஞ்சாட்டினார்.

# நாயுடுவை நீக்குவது பற்றி தனியே முடிவு எடுக்க முடியாது

## கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, மார்ச் 23

''ஐக்கியமுன்னணியிலிருந்து சந்திரபாபு நாயுடுவை நீக்குவது தொடர்பாக தனித்தனியாக தன்னிச்சையாக யாரும் முடிவு எடுக்க முடியாது. ஐக்கிய முன்னணியின் வழிகாட்டும் குழுக் கூட்டம் தான் இது போன்ற பிரச்சினைகளில் முடிவு எடுக்கும்.''

தமிழக முதல்வர் கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி. மு. க வின் தலைமைச் செயற்குழுக் கூட்டம் முடிந்த பிறகு செய்தியாளர்களுக்கு அவர் பேட்டி அளித்தார்.

ஐக்கிய முன்னணியின் வழிகாட்டும் குழுக் கூட்டம் விரைவில் நடைபெறும். அதில் தான் இது குறித்து முடிவு எடுக்கப்படும். காற்றுவாக்கில் வந்த செய்தியை வைத்துக்கொண்டு கருத்துக் கூறவோ முடிவை அறிவிக்கவோ நான் விரும்பவில்லை. —என்றும் கருணாநிதி தெரிவித்தார். (ஐ. 10)

# சபாநாயகர் தெரிவு நாளை நடக்கும்!

புதுடில்லி, மார்ச் 23

இந்திய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் நாளை செவ்வாய்க்கிழமை தெரிவு செய்யப்படவுள்ளார்.

பொதுக் கருத்தின் அடிப்படையில் புதிய சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பது என்பதில் பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணியும் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய முன்னணி என்பனவும் ஒத்த கருத்தை கொண்டிருப்பதால் முன்னாள் சபாநாயகர் சங்மாவே மீண்டும் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படக் கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

சபாநாயகர் தேர்வில் பின்பற்றும் நடைமுறை குறித்து ஐக்கிய முன்னணித் தலைவர்கள் நேற்று மாலைபுதுடில்லியில் கூடி விவாதிக்க இருந்தனர்.

சபாநாயகர் தமது கட்சியைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

பொதுக்கருத்தின் அடிப்படையில் புதிய சபாநாயகரைத் தெரிவு செய்வதை தாம் ஆதரிப்பதாக ஆந்திரா மாநில முதல்வரும், தெலுங்கு தேசம் கட்சித் தலைவருமான சந்திரபாபு நாயுடுவும் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஜெயலலிதா மீதான ஊழல்வழக்குகள் தொடர்பாக சட்ட அமைச்சர் தெரிவித்த கூற்றால் சர்ச்சை!

சென்னை, மார்ச் 23

முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா மீது நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள லஞ்ச, ஊழல் மோசடி வழக்குகளை இந்தியாவின் புதிய அரசு மீளாய்வு செய்யும் என்றுமத்திய சட்டத்துறை அமைச்சர் எம். தம்பித்துரை தெரிவித்துள்ளார்.

அவரது இந்தக் கருத்து தமிழக அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சட்டத்துறை அமைச்சரின் இந்தக் கூற்று நீதித்துறை நடவடிக்கைகளில் அப்பட்டமாகத் தலையிடுவதாக உள்ளது என்றும் —

அது சட்டத்தின் ஆட்சிக்குப் புறம்பானது என்றும்—

பிரதமர் வாஜ்பாய் ஒரு போதும் இதனை ஏற்றுக் கொள்ளமாட்டார் என்றும் —

தமிழக சட்ட அமைச்சர் ஆலடி அருணா சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

அண்ணா தி. மு. க வைச் சேர்ந்தவரான தம்பித்துரையின் இக்கூற்று மத்திய சட்ட மற்றும் நீதித்துறை அமைச்சுப் பதவி தமது கட்சிக்காரருக்குத் தரப்பட வேண்டும் என்று ஏன் ஜெயலலிதா வலியுறுத்தினார் என்பதை அம்பலப்படுத்துகிறது.

ஜெயலலிதா மீது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு, கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு பொய்வழக்குகளை தொடுத்திருப்பதாக தம்பித்துரை கூறியிருக்கிறார். ஜெயலலிதாவுக்கு எதிரான ஊழல் வழக்குகள் குறித்து மத்திய அரசு கவனம் செலுத்தும் என்று தம்பித்துரை கூறியிருப்பது தமிழக அரசு மீது பழி சுமத்துவதாக அமைந்திருப்பது மட்டுமன்றி நீதிநிர்வாகத்தில் தயக்கமின்றி தலையிட முனைந்திருப்பதாகவும் அமைகிறது.

ஜெயலலிதா மீது 8 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. இதில் 6 வழக்குகளில் நீதிமன்றங்களில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. தன் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளில் ஜெயலலிதா முன்பிணை அனுமதி கோரிய போது வழக்குகள் அரசியல் பகைமை காரணமாகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ தொடுக்கப்பட்டவை என்று கருத இடமில்லை என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியிருக்கிறது.

ஜெயலலிதா மீதான வழக்குகள் உண்மையானவை, ஆதாரங்கள் உடையவை என உயர்நீதி மன்றம் கூறியிருப்பதை தம்பித்துரை அறியாதிருக்க நியாயமில்லை. தமது கட்சித் தலைவியைக் காப்பாற்ற தம்பித்துரை திட்டமிட்டு நீதி நிர்வாகத்தில் தலையிட முனைகிறார். சட்டத்துறை அமைச்சரே இவ்வாறு நீதி நிர்வாகத்தில் தலையிட முயற்சிப்பது சட்டத்தின் ஆளுமையை குந்தகப்படுத்தும் தவறான செயலாகும். இத்தகைய தவறான போக்கை பிரதமர் வாஜ்பாய் அனுமதிக்கமாட்டார் என்று நம்புகின்றோம் என்றும் ஆலடி அருணாசட்டசபையில் கூறியிருக்கிறார். [ஐ–10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் ஊழியரின்
# பாராட்டம் முடிவு

கொழும்பு, மார்ச் 23
லதிகவேலை நேரம் உட்
17 கோரிக்கைகளை முன்
து சுமார் ஒரு வார
த்துக்கு மேலாக தபால்
பர்கள் மேற்கொண்டு
வேலை நிறுத்தம்நேற்று
தினத்துடன் முடிவுக்குக்
ண்டு வரப்பட்டது.
ாழிற்சங்கப் பிரதிநிதி
கும், தபால் தொலைத்
ர்புகள், தொடர்புசா
பிரதி அமைச்சர் எம்.
ஏ. எம். ஹிஸ்புல்லா
ம் இடையில் நேற்று 10
த்தியாலங்கள் நடை
ற பேச்சுவார்த்தை
அடுத்தே வேலைநிறுத்
முடிவுக்குக் கொண்டு
பட்டது.
ழியர்களின் கோரிக்கை

கள் தொடர்பாக பிரதி அமைச்சர் உடனடித் தீர்வுகளை முன்வைத்தார்.

அவர்களின் மேலதிக கொடுப்பனவுக்காக திறைசேரியிடம் இருந்து 14 கோடி ரூபா பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தபால் ஊழியர்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் வேலைக்கு திரும்புவதாக உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தம் முடிவுற்றதால் தேங்கிக் கிடக்கும் 5 லட்சம் கடிதங்களையும் இரு நாள்களுக்குள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ-21.9)

## வவுணதீவில் புலி உறுப்பினர் மரணம்

மட்டக்களப்பு வவுணதீவுச்சந்தியில் நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலி உறுப்பினரான ஒருவர் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானார்.

வவுணதீவு இராணுவ முகாம் படையினர் பதுங்கியிருந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

ரி. 56 துப்பாக்கியுடன் அவரது சடலமும் மீட்கப்பட்டது. சடலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதே நேரம் வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்வீச்சுக்கு கரையாக்கன் தீவு கிராமவாசிகள் 3 பேர் காயமடைந்துள்ளார்கள். (ஐ-21)

# மேலும் பலருக்கு பூரான் கடித்தது
## வடமராட்சிப் பகுதியில்

நெல்லியடி, மார்ச் 23

வடமராட்சிப் பகுதியில் ஏழு வயதுச் சிறுமி உட்பட மேலும் மூவர் கடந்த சனிக்கிழமை வெள்ளைப் பூரானினால் கடியுண்டனர்.

புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை வீதியில் வசிக்கும் பாலச்சந்திரன் சுதர்சினி (வயது07), வல்வெட்டித்துறை மயிலியதனையைச் சேர்ந்த இராசதுரை சியாமளாதேவி (வயது 47), கொற்றாவத்தை அல்வாயை சேர்ந்த சீவரத்தினம் ஜெயரூபன் (வயது 12) ஆகிய மூவருமே வெள்ளைப் பூரானினால் கடியுண்ட நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை—

கடந்த வியாழன் காலை மட்டத் தேளினால் கடியுண்ட பெண்மணி மறுநாள் காலை அதே நேரம் வெள்ளைப் பூரானின் கடிக்கு இலக்கானார்.

இச் சம்பவம் பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவில் நிகழ்ந்துள்ளது. க. புஸ்பவதி (வயது 30) என்ற அப்பெண்ணும் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# தென்மராட்சி சங்கங்களில்
# பங்கீட்டு அட்டைக்குச் சீனி

தென்மராட்சி, மார்ச் 23
தென்மராட்சிப் பகுதி
சீனிக்குத் தட்டுப்
ஏற்பட்டுள்ளதால்
ப் பகுதியில் உள்ள பல
க்குக் கூட்டுறவுச் சங்கக்
க் கடைகளில் பங்கீட்டு
டைக்கு சீனி வழங்கப்
வருகிறது.
வகச்சேரி பலநோக்குக்
றவுச் சங்கக் கிளை
மூன்று அங்கத்தவர்
யுள்ள பங்கீட்டு அட்
க்கு அரைக்கிலோ சீனி
நான்கும் அதற்கு
பட்ட அங்கத்தவர்
க் கொண்ட பங்கீட்டு

அட்டைக்கு ஒரு கிலோ சீனியும் கிலோ 34 ரூபா வீதம் வழங்கப்படுகின்றது.

இதேவேளை பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் ஓர் அங்கத்தவருக்கு 500 கிராம் சீனியும், இரண்டு அங்கத்தவர்களுக்கு ஒரு கிலோ சீனியும், மூன்று, நான்கு அங்கத்தவர்களுக்கு ஒன்றரைக் கிலோவும் ஐந்தும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் கொண்ட பங்கீட்டு அட்டைக்கு இரண்டுகிலோ வீதமும் சீனி வழங்கப்படுகிறது. (ஐ-117)

## ‘கீதம்’ இலக்கியப் போட்டி:
## வெற்றியீட்டிய யாழ்ப்பாண மாணவர்

யாழ்ப்பாணம், மார்ச் 23
ராதனைப் பல்கலைக்
சங்கீத நாட்டிய சங்கம்
மையில் நடத்திய
ம்'' இலக்கிய போட்டி
முடிவுகள் வெளியிடப்
ள்ளன.
போட்டியில் யாழ்ப்
த்தைச் சேர்ந்த பல
ட்டியாளர்களும் பங்கு
வெற்றியீட்டியுள்ள
ர்களின் பெயர் விவ
வருமாறு:-

சிறுகதை
பாடசாலை மட்டம்
முதலாம் இடம் —
ர்மிலா (யூனியன் கல்
தெல்லிப்பழை)
மூன்றாம் இடம் —
கவிதா (மகாஜனாக்
ரி, மருதனார் மடம்)
ஆறுதல் பரிசு —
ம்யா (கிறிஸ்தவக் கல்
கோப்பாய்)
ராட்டுப் பெறுவோர்:-
ஏ. ஜீவா (ஞானாசாரி
கல்லூரி, கரவெட்டி)
ஜெனிபர் ஜானகி மரிய
ன் (வேம்படி மகளிர்
பாடசாலை)
குமரேஸ்வரி ஜெயரட்
(வேம்படி மகளிர் உயர்
சாலை)

கவிதை
பாடசாலை மட்டம்
முதலாம் இடம் —
கவிதா (மகாஜனாக்
ரி)
ராட்டுப் பெறுவோர்:-
சி. சுகந்தி (வேம்படி
ர் உயர் பாடசாலை)
த. சிவகாமி (மெத
பெண்கள் உயர் பாட
ல, பருத்தித்துறை)

கட்டுரை
பாடசாலை மட்டம்
மூன்றாம் இடம் —

செ. சசிலா (வேம்படி மகளிர் உயர் பாடசாலை)

★ ஆறுதல் பரிசு —
செ. ஜெயரூபினி (மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலை, பருத்தித்துறை)

பாராட்டுப் பெறுவோர்:-
★ க. செந்தமிழரசி (ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர்)
★ சி. சுகந்தி (வேம்படி)
★ சி. கார்த்திகா (யாழ். இந்துமகளிர் கல்லூரி)

சிறுகதை
பல்கலைக்கழக மட்டம்

★ மூன்றாம் இடம் —
வே. ஜெகரூபன் (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
★ ஆறுதல் பரிசு —
க. முகுந்தன் (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

கவிதை
பல்கலைக்கழக மட்டம்

இரண்டாம் இடம் —
வே. ஜெகரூபன் (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
★ மூன்றாம் இடம் —
ந. கிருஷ்ணகுமார் (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
ஆறுதல் பரிசு:-
★ ச. குமுதினி (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
ச. பிரேமினி (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

கட்டுரை
பல்கலைக்கழக மட்டம்

★ மூன்றாம் இடம்—
கங்கா தர்சினி (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

சிறுகதை
ஏனையோர்

★ மூன்றாம் இடம் —
சி. கதிர்காமநாதன் (சுழிபுரம்)

(உ-8)

# செய்திக் கொத்து

## மருந்து விநியோகம்

சண்டிலிப்பாய், மார்ச் 23

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை, அளவெட்டி அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றிக்கு இவ்வருட முதலாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகள் இவ் வாரம் யாழ் சுகாதார திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சிய பிரிவினால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

(ஐ-135)

## நியமனம்

திருநெல்வேலி, மார்ச் 23

யாழ். சுகாதாரத்திணைக்கள மாப்பு நோய் சிகிச்சை (கிளினிக்) நிலையத்தின் பொறுப்பதிகாரியாக டாக்டர் கே. ஆர். பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். முன்பு இங்கு கடமையாற்றிய டாக்டர் கொடிபிலி சமன் தென் இலங்கைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து தென்னிலங்கையைச் சேர்ந்தவரான இவர் புதிய பொறுப்பதிகாரியாகப் பதவி ஏற்றுள்ளார். (ஐ-135)

## ஆலயம் புனரமைப்பு

நீர்வேலி, மார்ச் 23

நீர்வேலி வடக்கில் படியம்மாள் கோயில் என அழைக்கப்படும் கந்"ணக் கடவை ஸ்ரீஇராசராசேஸ்வரி அம்பாள் கோயில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

நீண்டகாலமாகச் சேதமடைந்திருந்த இக்கோயில் இப்பகுதி தொண்டர்களின் முயற்சியால் புனரமைக்கப்பட்டு வருகிறது.

புத்தாண்டில் புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ஐ-110)

## பாசன தடுப்பணை திறப்பு

அளவெட்டி, மார்ச் 23

அகதிகளுக்கான ஐ.நா. தூதரக நுண்கருத் திட்டத்தின்கீழ் மாதகல் பகுதியில் சுமார் ஐந்து லட்சம்ரூபா செலவில் அமைக்கப்பட்நீர்ப்பாசன தடுப்பணை ஒன்றை ஐ. நா கள உத்தியோகத்தர் எஸ். பாலகிருஷ்ணன் அண்மையில் திறந்து வைத்தார்.

இவ் வைபவத்தில் வலி. தென்மேற்கு பிரதேச செயலர் திரு. வேதநாயகன் ஐ. நா. யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. ... ... கலந்து கொண்டனர்.

(ஐ-13)

## பரிசளிப்பு விழா

சண்டிலிப்பாய் மாாச் 23

மானிப்பாய் சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலை நிறுவுனர் நினைவும், பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பாடசாலை அதிபர் சங். சதோதரி லடிஸ்லாஸ் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில்பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட இணைப்பாளர் சி. செல்லையா கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக மானிப்பாய் பங்குத் தந்தை அருட்திரு. எஸ். யூஜின் பிரான்சிஸ் அடிகளார் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் ந. சிவபாதம் (புத்தொளி) கலந்து கொள்வார்.

(ஐ-135)

## முத்திரைகள் வரும்

அரியாலை, மார்ச் 23

யாழ். பிரதம தபாலகத்தில் நூறு ரூபா, ஐம்பது ரூபா பெறுமதியான முத்திரைகளுக்கு மீண்டும்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த முத்திரைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை செஞ்சிலுவைக் கப்பலில் எடுத்து வரப்படும் என்று யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார். (ஐ-17)

## மாணவன் சாதனை

யாழ்ப்பாணம், மார்ச் 23

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 97 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றிய யாழ். மத்திய கல்லூரி மாணவன் நவநீதன் என்பவர் கணிதத்துறையில் 4 ‘ஏ’ பெற்றுள்ளார்.

இடம்பெயர்ந்து, பல கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தின் மத்தியிலும் அவர் இப் பெறுபேற்றைப் பெற்றது ஒரு சாதனையாகும். (ஐ-8)

## எலுமிச்சைப் பயிர்களில் இலை சுருட்டி

உரும்பிராய், மார்ச் 23

எலுமிச்சைப் பயிர்கள் ஒருவகை இலைசுருட்டி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இவை பூப்பதும் காய்ப்பதும் குறைந்துள்ளது.

எலுமிச்சைப் பயிர்ச் செய்கையாளர்கள் பலர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-154)

## கருத்தரங்கு

தென்மராட்சி. மார்ச் 23

சாவகச்சேரி பளை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொதுச் சபை உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9. 30 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் கி. பூபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இக் கருத்தரங்கில் பொதுச் சபை உறுப்பினர்களின் கடமைகள், பொறுப்புகள் ஆகியவை பற்றி யாழ். மாவட்ட கூட்டுறவு கல்வி அலுவலர் சி. சிவராசசுந்தரம், மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் சு. சிவசுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

(ஐ-117)

## சிறுவன் படுகாயம்

தென்மராட்சி மார்ச் 23

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் வீதி கிடங்கு ஒன்றில் இறங்கி ஏறியபோது மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்த பத்து வயதுச் சிறுவன் தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்தான்

கடந்த வெள்ளிக்கிழமை மட்டுவில் வடக்கில் இச் சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஸ்ரீமோகன் கஜீபன் (வயது 10) என்னும் சிறுவனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

(ஐ-117)

## கிராம அலுவலர் நியமனம்

நீர்வேலி, மார்ச் 23

நீர்வேலி வடக்கு கிராம அலுவலர் பிரிவுக் கடமைகளை கடந்த பல மாதங்களாக நீர்வேலி தெற்கு கிராம சேவையாளர் சு. சண்முகவடிவேலு செய்துவந்துள்ளார்.

கடந்த 11 ஆம்திகதி முதல் உரும்பிராய் வடக்கில்கடமையாற்றி வந்த எஸ். அல்பிறட் இப் பொறுப்பை ஏற்று கடமையாற்றி வருகின்றார்.

(ஐ-110)

## புள்ளி விவரங்கள் சேகரிப்பு

நீர்வேலி, மார்ச் 23

நீர்வேலி வடக்கு கிராம சேவை அலுவலர் பிரிவில் குடும்ப ரீதியாக அங்கத்தவர் தொகை, அங்கத்தவர் நிலை, வாழ்க்கை வசதிகள், குடிநீர் வசதிகள், மற்றும் கால் நடை வளர்ப்பு, பிரயோனசமுள்ள மரங்கள் வளர்ப்பு போன்ற பல்வேறு வகைப்பட்டவிவரங்களும்தனித்தனி படிவங்களாக இரட்டைப் பிரதிகளில் சேகரிக்கப்படுகின்றன.

(ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டில் எரிபொருள்களின் விலைகளை குறைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 23

குடாநாட்டில் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்படுவதை உறுதி செய்யுமாறு வடக்கின் மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவரிடம் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கேட்டிருக்கிறது.

இது தொடர்பாக சமாசத்தின் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் அதிகாரசபையின் தலைவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பெற்றோலின் கொழும்பு விலை 50 ரூபாவாக இருக்கையில் அது 54 சத வீத அதிகரிப்புடன் இங்கே 77 ரூபாவாக விற்கப்படுவதும், டீசலின் கொழும்பு விலை 13 ரூபா 20 சதமாக இருக்கையில் அது 44 சத வீத அதிகரிப்புடன் 21 ரூபா 55 சதமாக இங்கு விற்கப்படுவதும், மண்ணெண்ணெயின் கொழும்பு விலை 10 ரூபா 40 சதமாக இருக்கையில் 30 சதவீத அதிகரிப்பதுடன் இங்கு அது 13 ரூபா 45 சதமாக விற்கப்படுவதும் இக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஏனைய அத்தியாவசியப் பொருள்களை கொழும்பு விலையிலோ அல்லது நியாயமான விலையிலோ கப்பல் கட்டண அறவீடுகளை கருத்திற் கொண்டு விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற நிலையில் எரிபொருளுக்கு மட்டும் மிகவும் அதிகரித்த கட்டணத்தை யாழ்ப்பாண மக்களிடமிருந்து அறவிடுவது ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு விடயம் அல்ல.

விலைகளின் அதிகரிப்பு சரி அரைவாசியாக குறைக்கப்படலாம் என்றும், நாங்கள் கொழும்பு விலையைக் கோரவில்லை; ஆயினும் நியாயமான குறைந்த அதிகரிப்பை மட்டுமே கோருவதற்கு எமக்கு உரிமையுண்டு என்றும் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## சிமெந்து விநியோகம்

அரியாலை, மார்ச் 23

கொழும்புத்துறை மேற்கு கிராமசேவையாளர் பிரிவில் இடம்பெயர்ந்தோர் முத்திரை வைத்திருப்பவர்களுக்கு கடந்த சனிக்கிழமை சிமெந்து பைக்கட்டுக்கள் வழங்கப்பட்டன.

சுவாமியார் வீதியில் உள்ள கிராமசேவையாளர் அலுவலகத்தில் வைத்து கிராம உத்தியோகஸ்தர் செல்வி கமலவேணியினால் இவை விநியோகிக்கப்பட்டன.

(ஐ-17)

## சுற்றிவளைப்பு

சுதுமலை, மார்ச் 23

நேற்று முன்தினம் அதிகாலை மூளாய் சுளிபுரப் பகுதிகளில் படையினரின் சுற்றி வளைப்பு தேடுதல் இடம் பெற்றது. இச்சுற்றி வளைப்பு நண்பகல் வரை நீடித்தது.

(ஐ-139)

### மாத்தறையில்

## தாய், பிள்ளைகள் உட்பட ஐவர் படுகொலை

கொழும்பு, மார்ச் 23

மாத்தறை மாவட்டம் வீரக்கெட்டியாவில் தாய், பிள்ளைகள் உட்பட 5பேர் கொலை செய்யப்பட்டு வீட்டோடு எரிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை உறக்கத்திலிருந்தவர்கள் மீது முதலில் கிரனேற் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட பின்பு வீட்டிற்கு தீ வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தின் போது வீட்டில் கணவர் இருக்கவில்லை. சம்பவம் அறிந்து வீடு திரும்பிய கணவர் மீதும் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது. அவர் காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறுதான் இதற்குக் காரணம் என்றும், இச்சம்பவம் குறித்து 4பேர் நேடப்பட்டு வருவதாகவும் வீரக்கெட்டியா பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-21-9)

## போத்தலில் கள் அடைக்க தொழிற்சாலை அமையும்

யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றை அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளது.

கள் உற்பத்தி அதிகரிக்கும் பருவ காலத்தில் மேலதிக உற்பத்தியை வீணாக்காது பயன்படுத்துவதற்காக இந்த தொழிற்சாலை திறக்கப்படவுள்ளதாகவும், 25 ஆயிரம் போத்தல்கள் அடைக்கப்பட்டு சந்தைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின்பொது முகாமையாளர் அ. செல்வராசா தெரிவித்தார்.

(ஐ-135)

## நஞ்சருந்திய நிலையில் இளம் சோடிகள் மீட்பு

திருமணத்தில் இணைவதற்கு பெற்றோர்கள் தடையாக இருந்தமையினால் விரக்தியுற்ற காதல் சோடிகள் நஞ்சருந்தி மயக்கமுற்ற நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கரணவாயைச் சேர்ந்த 21 வயது இளைஞர்ஒருவரும், கரவெட்டியைச் சேர்ந்த 31 வயது யுவதி ஒருவருமே இவ்வாறு நஞ்சருந்தி மயக்கமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மயக்கமுற்ற நிலையில் நேற்று முன்தினம் மாலை 4. 30 மணியளவில் மந்திகை கருகம்பன் மயானத்திற்கருகில் கிடந்த இவர்கள் இருவரும் அங்கிருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். [ஐ-109-8]

## கசிப்பு ஒழிப்பு பிரசுரங்கள்

கொழும்புத்துறை, மார்ச் 23

யாழ். கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் கசிப்பு ஒழிப்பு தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்பகுதியில் கசிப்பை முற்றாக ஒழிக்க சங்கத்தின் அனுசரணையுடன் சகல நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டுவருவதாகச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-30)

## பாம்பு தீண்டியது

தென்மராட்சி, மார்ச் 23

வளவின் வேலியோரப் பகுதியை துப்புரவு செய்து கொண்டிருந்த இளைஞனை வேலியோரத்தில் காணப்பட்ட புற்றிலிருந்து எழுந்த பாம்பு தீண்டிய சம்பவம் தாவளை இயற்றாளைப் பகுதியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னப்பு சிவயோகநாதன் (வயது 22) என்னும் இளைஞரே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

(ஐ-117)

## பஸ் சேவை நீடிப்பு

தென்மராட்சி மார்ச் 23

யாழ். பஸ் நிலையத்திலிருந்து மாலை 4. 30 மணிக்கு புறப்படும் முகமாலை வரையான வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ் நேற்று முன்தினம் முதல் பளை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் பளை பஸ் நிலையத்தில் தரிதது நின்று காலை 6. 15-க்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் செல்லும்.

கடந்த மூன்று மாதங்களாக தினமும் காலையில் பளையிலிருந்து முகமாலை வரை நடத்தப்பட்டு வந்த இணைப்பு பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

(ஐ-117)

## பஸ் வண்டி அடிக்கடி பழுது

இளவாலை, மார்ச் 23

தொட்டிலடி ஊடான இளவாலை— யாழ். சேவையில் ஈடுபடும் பஸ் அடிக்கடி பழுதடைந்து இடைவழியில் நின்று விடுவதால் பயணிகள் சிரமங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

இந்த பஸ் கிளைமோர் கண்ணிக்கு இலக்காகி முன்னர் சேதமடைந்து திருத்தப்பட்டது ஆகும்.

(ஐ-ரீ)

## விலை வீழ்ச்சி

குத்தரிசியின் விலை குறைந்துள்ளது.

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் குத்தரிசியை கிலோ 23 ரூபாவிற்கு வாங்கக் கூடியதாக உள்ளது.

இதே நேரத்தில் குத்துப் பச்சை, தீட்டல் அரிசி ஆகியவற்றின் விலைகள் குறையவில்லை. (ஐ-154)

## புறநிலைப் படிப்புகள் அலகின் உபபிரிவுகள் நிறுவப்படும்

நல்லூர், மார்ச் 23

சாவகச்சேரி, பருத்தித்துறைப் பகுதிகளில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் புறநிலைப் பட்டப்படிப்புக்கள் அலகின் உப பிரிவுகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

மாணவர்களின் வசதி கருதி சாவகச்சேரியில் ஆரம்பமாகவுள்ள பிரிவு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும். பருத்தித்துறைக்கான பிரிவை நகரப்பகுதியில் வசதியான ஓரிடத்தில் நடத்த துணைவேந்தர் முயற்சி எடுத்து வருகிறார்.

(ஐ-103)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 24 — 02 — 1980



இறப்பு: 21 — 02 — 1998

செல்வி
**சுமித்திரா நாகராஜா**
(4ஆம் வட்டாரம் அனலைதீவு)

அன்னாரின் பிரிவால் துயருறும்—
நாகராசா (தந்தை), வள்ளியம்மை (தாய்), சகோதரர்கள்: காலஞ்சென்ற நா. ஆனந்தராசா, நா. சிவராசா (அனலைதீவு), நா. ஞானதாஸ் (ராசு இந்தியா), நா. விஜயலட்சுமி (அனலைதீவு), நா. விஜயகலா (அனலைதீவு), நா. நிமலதாஸ் (அனலைதீவு), மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள்.

4ஆம், வட்டாரம்,
அனலைதீவு.

(சி-8177)


மாலை மூப்படைகிறது... இரவு விடிகிற சந்தியில் நட்சத்திரங்களுடன் சந்தியா வருகிறாள்
இரவு மடிகிறது. . காலை விரிகிறது .. காலைச்சந்திப்பாடலை அவள் பாடுகிறாள்...

ஓராண்டு நிறைவில்...

சந்தியா மல்ரி கோட்யாட்

அன்பளிப்புப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், வாழ்த்துமடல்கள், அழைப்பிதழ்கள், அழகிய வர்ணப்படங்கள், பாடசாலை உபகரணங்கள், காலணிகள் சுவீட்ஸ் & பிஸ்கற்ஸ், எவர்சில்வர், கிளாஸ் மற்றும் உங்கள் விருப்பத்தேர்வுகள் ஒவ்வொன்றுக்கும்

சந்தியா சந்தியா சந்தியா சந்தியா சந்தியா சந்தியா சந்தியா சந்தியா சந்தியா
சந்தியா சந்தியா சந்தியா சந்தியா சந்தியா சந்தியா சந்தியா சந்தியா சந்தியா

சந்தியா மல்ரி கோட்யாட்,

531, பருத்தித்துறை வீதி, நல்லூர். (54224)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### திருத்த வேண்டுமா?

ரி. வி. றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும், ரி. வி. அன்ரனாக்கள் பொருத்திக் கொள்ளவும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம், (B, Sc. Ceylon Dip In Electronic Engineering London), 284, ஸ்ரான்லிவீதி, (நாக விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி/3069]

### காணவில்லை

இம்மாதம் 15 ஆம் திகதி லிங்கன் கிறீம் ஹவுஸிற்கு முன்பாக விடப்பட்ட லுமாலா ஸ்பெஷல் 26'' நீலநிற 55586601 இலக்க மிதிவண்டியை தவறுதலாக எடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். ஜெகதீஸ்வரன், கீதா றேடர்ஸ், 107, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [54216]

### ஆங்கிலம் விசேடமாக

Spoken English G. A. .Q, O/L 98 இல் Distinction, Credit பெறுபேறடைய (ஆண்டு 9, 10 உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [54233]

## பாதிக்கப்பட்டோர் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

காணாமற்போன அரச ஊழியர்களில் கல்வித் திணைக்களத்துடன் தொடர்புடைய அரச ஊழியர்களின் மனைவிமார், உறவினர்கள் ஆகியோரை தமது விவரங்களைத் தந்துதவுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

த. பஞ்சலிங்கம், சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர், 442, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற முகவரியில் விவரங்களை ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை கல்வி அமைச்சின் செயலாளரைச்சந்தித்துப் பேச இருப்பதால்மேற்படி விவரங்களை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறுதமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

''காணாமற்போன அரச ஊழியர் குடும்பங்களின் பரிதாப நிலை'' என்ற தலைப்பில் 20-03-98 ஆம் திகதிய உதயனில் வாசகர் திருமுகம் பகுதியில் வெளிவந்த விடயம் தொடர்பாகவே இந்த விவரங்கள் பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## யோகர் சுவாமி திருவடி பூசை

கொழும்புத்துறை, மார்ச் 23

கொழும்புத்துறை யோகர் சுவாமிகளது திருவடி பூசை இன்று திங்கட்கிழமை காலை 7-00மணிக்கு சுவாமி சமாதிக்கு முன்னால் உள்ள பூந்தோட்டத்தில் பூசை, வழிபாடுகளுடன் நடைபெறவுள்ளது. (ஐ-30)


யாழ். நகரில்!

வெளியூர் – உள்ளூர் – தொலைபேசித் தொடர்புகளைத் தாமதமின்றிப் பெற்றுக் கொள்வதற்கு

**THAMPI COMMUNICATIONS**

**தம்பி கொம்யூனிகேஷன்ஸ்**

( 24 மணிநேர சேவைகள் )

90, கந்தப்பசேகரம் வீதி,

( சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை சாந்தி தியேட்டர் முன்பாக )

யாழ்ப்பாணம்.

(54244)



## மலிவுப் பதிப்பு

**சுவாமி விவேகானந்தரின்**

சொற்பொழிவுகள் – ஒரு தொகுதி ரூபா 30

1. நமது சமய அடிப்படை (யாழ்ப்பாணச் சொற்பொழிவு)
2. நமது நோக்கம்
3. நமது கோட்பாடு
4. நம்விதி நம்கையில்
5. நமது பங்கு
6. நமது நாடு
7. எது வழிபாடு?
8. நமது பெருமை

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு மலர் – ரூபா 50

கிடைக்குமிடம்:

**சிவசம்பு மாளிகை,**

மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

செயலளார்.

ஸ்ரீராம கிருஷ்ண
சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை. (சி/3164)



## விற்பனைக்கு

க. பொ. த. உயர்தர வகுப்பிற்கான கடந்த 5 வருட கால வினாவிடைகள் அஸ்ரன் வெளியீடுகள். எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சித்திரை புது வருடத்தை முன்னிட்டு 01 - 04 - 98 முதல் 20 - 04 - 98 வரை சகல விதமான பாடசாலைப் புத்தகங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் விசேட கழிவுடன் வழங்கப்படும். எம் பணி கல்விப்பணி– சமயப்பணி.

**சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் அன்ட் புத்தகசாலை,**

சாவகச்சேரி. (54209)



## யா-சாவகச்சேரி மகளிர் கல்லூரி

வருடாந்த பழைய மாணவர் சங்கப்

**பொதுக்கூட்டம்**

இடம்:- பாடசாலை மண்டபம்
காலம்:- 24-03-1998 (செவ்வாய்)
பிற்பகல் 3.00 மணி

தவறாது பழைய மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ளவும்.

திருமதி இ. ஜீவேந்திரா
செயலாளர்

செல்வி கி.வீரசிங்கம்
தலைவர்

(சி/3173)


## சாவகச்சேரி நகரில் மின் விநியோகம் தடை

### மாணவர்கள் பாதிப்பு

பரீட்சை வேளையில் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதால் மாணவர்கள் மீண்டும் விளக்கில் படிக்கும் நிலை சாவகச்சேரிப் பகுதியில் ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரப்பகுதிக்கு மின் விநியோகம் வழங்கும் ஜெனரேற்றரின் உதிரிப்பாகம் ஒன்று பழுதடைந்ததால் மின் விநியோகம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இத் திருத்த வேலைக்கான உதிரிப்பாகம் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்த பின்னரே திருத்தப்பட்டு மின் விநியோகம் வழங்கப்படுமென மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மாணவர்களுக்கான முதலாம் தவணைப் பரீட்சை இவ்வார நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ–117)




தரமான முறையில் குறைந்த கட்டணத்தில்

▶ போட்டோ பிரதிகள்

▶ லமினேட்டிங் (கவரிடுதல்)

நாடவேண்டிய இடம்:

**அருண்**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## முதலாவது பிறந்த நாள் நல் வாழ்த்து

(23 - 03 - 98)

செல்வி

★ டிரோசா கிருஷ்ணகுமார் ★

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இருஷ்ணகுமார் கிரிசா தம்பதிகளின் செல்வப் புதல்வி டிரோசா தனது முதலாவது பிறந்த நாளை [23 – 03 - 98] இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

டிரோசாவை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, ராசன்மாமா, அப்பம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் விநாயகர் அருள் பெற்று பல்லாண்டு காலம் சீருடனும், சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றனர்,

தகவல்:
இ. தவராசா
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)
அம்மப்பா

''அன்பகம்''
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

[சி/3176]



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,

யாழ். கிளை.

### வாகனம் விற்பனைக்கு கூறுவிலை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்குச் சொந்தமான ஓர் ''எல்வ்'' வான் விற்பனைக்கு உள்ளது. இதனை எமது காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் பார்வையிடலாம். மேலும் விவரங்களுக்கு கௌரவ செயலாளருடன் தொடர்புகொள்ளவும். இதன் கூறுவிலையை சீல் செய்து பதிவுத் தபால் மூலம் 15– 04– 98– க்கு முன்னதாக கௌரவ செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும். இவ்விண்ணப்பங்கள் 16- 04- 98 பி. ப 3. 00 மணிக்குப் பரிசீலனை செய்யப்படும். கூறுவிலை கோரியவர்கள் அன்று சமுகம் கொடுக்கவும்.

கிளை தீர்மானித்த விற்பனை விலையிலும் பார்க்க கூறுவிலைகள் குறைவாக இருந்தால் விற்பனை நடைபெறமாட்டாது.

நன்றி.

கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
1998– 03- 21.

(கி/3172)



## கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!

சகல வசதிகளுடனும் தங்குவதற்கு நாடவேண்டிய ஸ்தாபனம்

**ஏ. கே. பி. லொட்ஜ்** ( சுலைமான் ஆஸ்பத்திரிக்கு முன்பாக )

என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

T. P. NO:- 075330356
075330354

**A. K. B. LODGE** 9, GRANDPASS ROAD, COLOMBO – 14

(54223)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஆசிரியர் நியமனங்கள்

இலங்கை முழுவதற்கும் பத்தாயிரம் தமிழ் மொழி மூல ஆசிரியர்களை நியமிப்பதற்கு கல்விஅமைச்சர் ரிச்சார்ட் பத்திரானா திட்டம் வகுத்துள்ளார்.

அந்த வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் ஆசிரியர் நியமனங்கள் இருந்து இருந்தாற் போல வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த நியமனங்கள் முறையாகவும், சீராகவும், நியாயமாகவும் வழங்கப்படவில்லை என்ற அதிருப்தி மக்கள் வட்டாரங்களில் பலமாக நிலவுகிறது.

ஜி. சீ. ஈ. உயர்தர தகுதி உடையவர்கள் போட்டிப் பரீட்சை மூலமே தெரிவு செய்யப்படுகிறார்கள். திறமை அடிப்படையில் நியமனம் என்று வெளியே தெரிவிக்கப்படுகிறது. ஆனால் குறைந்த புள்ளிகள் எடுத்தவர்கள் நியமனம் பெற, ஏதோ ஒரு காரணம் தெரிவிக்கப்பட்டு அதிக புள்ளிகள் பெற்றவர்கள் ஏமாற்றம் அடைந்து மனம் உடைந்து போயுள்ளனர்!

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் பட்டியல் தயாரிக்கப்படுவதில் பல தில்லு முல்லுகள், குளறுபடிகள் இருப்பதாகப் பல வகைக் குற்றச் சாட்டுகளும் மக்கள் மத்தியில் இருந்து வருகின்றன.

குடாநாட்டில் மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் வழங்கப்பட்ட, வழங்கப்படவிருக்கும் ஆசிரியர் நியமனங்களில், அரசியல் ஊடுருவல், அதிகாரிகள் செல்வாக்கு, கையூட்டு என்பன சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்ற சந்தேகம் பாதிக்கப்பட்டவர்களால் மட்டுமன்றி பொதுவாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நியமனம் வழங்கப்படும் பொறுப்பு வடக்கு – கிழக்கு மாகாண சபைக் கல்வி அமைச்சின் கையில் இல்லாமல், மத்திய கல்வி அமைச்சு மூலம் செய்யப்பட்டால் இந்தளவு ''ஊத்தை''யாக இருந்திருக்காது என்று கருதுமளவுக்கு ஆசிரியர் நியமனங்கள் குறித்து அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

பட்டதாரிஆசிரியர்களை நியமிக்கும் விடயத்திலும் வடக்கு— கிழக்கு மாகாண சபை மட்டும் பட்டதாரிகளின் கல்வித் தகுதியை என்றுமில்லாதவாறு ''புடம் போட்டுப்பார்க்க'' —போட்டிப் பரீட்சை நடத்த— முடிவு செய்திருப்பது குறித்தும் பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

அரசாங்க நியமனங்களில் திறமைக்கும், தகுதிக்கும் இடம் கொடுக்கப்பட வேண்டும்; அரச திணைக்களங்களில் ஊழல், மோசடிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கூறுவது —

வடக்கு–கிழக்கு மாகாண சபை அதிகாரிகளுக்குச் செவிடன் காதில் ஊதிய சங்குதானோ? புதிய புதிய ''நிர்வாகக் கலாசாரங்களை'' அவர்கள் உருவாக்குகிறார்கள்! தட்டிக் கேட்க எவருமில்லை; அல்லது அவ்வாறு செய்யாமல் தடுத்து விடலாம் என்ற துணிவா? பாதிக்கப்பட்ட மக்களின் ஏக்கப் பெருமூச்சும், சாபமும் இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் தம்மைச் சுற்றி வளைக்கும் என்பதனை இந்த அதிகாரிகள், அரசியல்வாதிகள் உணராதது ஏனோ?

---

## தந்தை செல்வா அன்று சொன்னவை:

# பண்டாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம்

# இடைக்கால ஒழுங்கே; முடிவான பொருத்தமல்ல

### செல்லப்பா நடராசா


பகுதி – 2

(நேற்றைய தொடர்ச்சி)

தந்தை – செல்வாவின் இந்த விளக்கம் பரபரப்பான முறையில் வெளியிடப்பட்டது. கிராமம் கிராமமாகப் போராட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. தொண்டர்கள் பாதயாத்திரையாக வடபுலத்திலிருந்து வன்னியூடாகத் திருமலை சென்று அங்கே மாபெரும் மகாநாடொன்றை நடத்தத் திட்டமிட்டு அதன் பொருட்டு ஆயத்தமாகினர்.

யாத்திரையும் ஆரம்பமாகிச் சென்று கொண்டிருந்த வேளையில்தான் இப்போராட்டத்தைத் தொடரவிட்டால் நாடு எக்கதிக்குள்ளாகுமோ என்பதனை உணர்ந்து கொண்டவரான பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தந்தை செல்வா அவர்களுடன் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்.

தந்தை செல்வா அவர்கள் அன்றைய அரசியலில் ஒரு வலுவான — காத்திரமான சக்தியாக விளங்கினார். அவரது தலைமையில் 1956 ஆம் ஆண்டில் பத்து நாடாளுமன்ற அங்கத்தவர்கள் இருந்தனர். நான்கு தசாப்தங்களுக்கு முன்னரேயே இலங்கைச் சிறுபான்மை இனத்தின் பிரச்சினைகளுக்கு சர்வதேச மட்டத்தில் களம் அமைத்துக் கொடுத்தவர் தந்தை செல்வா. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மூதூர், மட்டக்களப்பு, அம்பாறை உள்ளிட்ட வடக்கு — கிழக்குத் தமிழ் மக்களையும், மலைநாட்டுத் தமிழ் மக்களையும் ஒன்று படுத்தும் ஒரு சக்தியாகவும் விளங்கினார். அவரது ஆளுமை இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களிடையே அதிக ஒற்றுமை உணர்வை வளர்த்தது. சமூக ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கத்துணை புரிந்தது.



தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுக் கட்டுரை

### இடைக்கால ஒழுங்கே

1957ஆல் ஆண்டு ஜூலை மாதத்தில் பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தான பின் அவர் நான் சார்ந்த பத்திரிகைக்காக இரண்டு பிரத்தியேக செவ்விகள் அளித்தார். ஒன்றில் தாம் செய்து கொண்டுள்ளதான சமரசம் ஓர் இடைக்கால ஒழுங்கன்றி முடிவான பொருத்தம் அல்ல என்று விளக்கியதுடன் இந்த இடைக்கால சமரசத்தில் தமிழ் மக்களுக்கு நன்மை உண்டென்றும் இது அவர்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கது என்றும் கூறினார்.

> ''இன்று நாங்கள் கேட்பவற்றை நீங்கள் தர மறுக்கின்றீர்கள். இவற்றைப் பின் ஒரு சமயம் நீங்களாகவே தர முன் வந்தாலும் அவற்றை எமது வருங்காலச் சந்ததியினர் ஏற்க மறுக்கின்ற ஒரு காலமும் வரும் என்பது தான்''.

அடுத்த செவ்வியில், ஒப்பந்தம் பற்றிய கண்டனங்களுக்குக் கூறிய விளக்கம் யாதெனில் முழுக்கக்கிடைக்கவில்லை. ஆனால் விலை மதிக்க முடியாத சில உரிமைகள் கிடைத்துள்ளன என்பதுதான். ஆனால் இந்த ஒப்பந்தம் செல்லாக்காசானமைக்குத் தந்தை செல்வா அவர்கள் எதுவித பங்காளியும் அல்லர் என்பது வரலாறு.

### தீர்க்கதரிசனம்

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது. அப்போதைய பிரதமர் டி. எஸ். சேனாநாயக்காவினது தலைமையிலான அரசு மலைநாட்டுத் தமிழ் மக்களது வாக்குரிமை குடியுரிமைகளை இல்லாமற் செய்தொழித்தது. அதனால் மலைநாட்டுத் தமிழ் மக்கள் தமது அனைத்து நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களையும் இழக்க நேரிட்டது. அந்த நேரத்தில் மலைநாட்டுத் தமிழ் மக்களது உரிமைகளுக்காகத் தந்தை செல்வா நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மிகமிகப் பலமாகக் குரல் கொடுத்தார்.

மலைநாட்டுத் தமிழ் மக்களது குடியுரிமை வாக்குரிமைகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாகப் பறிக்கப்பட்ட அந்தச் சந்தர்ப்பத்தில், அதற்கு ஆதரவாக நின்ற வடக்கு— கிழக்கு 13 நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்கும், தமிழ் பேசும் இனத்திற்கும் தந்தை செல்வா அவர்கள் கூறிய மிக மிகத் தீர்க்கதரிசனமான வார்த்தைகளின் சாராம்சம் இது தான்.

இந்தக் கொடுமை அநீதி இன்று மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு, நாளை எங்களுக்கு அதாவது வடக்கு— கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு என்பதுதான்.

அவர் கூறியது போல 1956-ல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டது. தொடர்ந்து இதே பாணியில் பல அரசியல் நடவடிக்கைகளை தமிழ் பேசும் மக்கள் காணலாயினர்; இன்றுவரை கண்டு கொண்டும் இருக்கின்றனர்.

### அமுதவாக்கு

இன்னொரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தந்தை செல்வா அவர்கள் கூறிய அமுதவாக்கு ''தமிழ் மக்களை ஆண்டவன் தான்

( 9 ஆம் பக்கம் பார்க்க)

---

# அமரர் டானியலின் நாவல்கள்

# வரலாற்று ஆவணங்களாக வாழும்

யாழ்ப்பாணம் —ஆனைக் கோட்டையில் பிறந்து, வளர்ந்து, நல்லூர்க் கோயில் வீதியில் வாழ்ந்து, பிரபல தமிழ் எழுத்தாளராகக் கௌரவிக்கப்பட்ட திரு. கே. டானியல் அவர்களின் நினைவு தினம் இன்றாகும்.

நிலப்பிரபுத்துவ — முதலாளித்துவ அமைப்பில், மிகவும் பின்தங்கிய சமூகத்தில் தோன்றிய அவரது கல்வி, ஆரம்பப் பிரிவுடன் நின்று விட்டது. யாழ். — மத்திய கல்லூரியின் முதல் அதிபராக இருந்த பேர்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளின் பேரில் ஆறுமுக நாவலர் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட விவிலிய வேதமான ''பைபிள்'' என்ற நூலை நன்கு படித்தமையால், டானியலின் தமிழ்மொழி அறிவு மிகத் தீவிரமாக விருத்தியடைந்தது.

1950களின் நடுப்பகுதியில், வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளில் டானியலின் சிறுகதைகள் பிரகாசமாகின. சிறுகதைகளின் கருவூலங்கள், முதலாளித்துவ பொருளாதாரக் கட்டமைப்பைச் சாடுவதாக அமைந்திருந்தன. பொதுவுடைமைக் கண்ணோட்டமே அவரது பூசனைக் கனவாகச் சென்று கொண்டிருந்தது.

1960 களின் நடுப்பகுதியில் சமூக மாற்ற மேம்பாட்டுக்கான களங்கள் அமைந்த நாவல்களை எழுதினார். போராளிகள் காத்திருக்கின்றனர், பஞ்சமர், அடிமைகள், கானல் பஞ்சகோணம், கோவிந்தன், தண்ணீர் என்பனவே அவரது நாவல்களாகும். முருங்கை இலைக்கஞ்சி,

(8 ஆம் பக்கம் பார்க்க)

### உதயவாக்கு

தன்னடக்கமுள்ளவன் நேர்மையை விரும்புகிறான். தனக்கு நேர்ந்த, நேரப் போகின்ற சுக துக்கங்களை மன அமைதியுடன் ஏற்றுக் கொள்கின்றான்.

சுவாமி விவேகானந்தர்

---

### யாழ். வண்ணை. ஸ்ரீ வைத்தீஸ்வரன் மகோற்சவ சிறப்பம்சம்

சைவமும் தமிழும் வாழத் தண்ணருளீந்து ஞாலம்<br>
உய்வகை வண்ணை வந்த வைத்யநாத வள்ளல்<br>
தையலாள் பங்கனாகத் தனிப்பெருங் கோலத்தோடு<br>
இத்தரை மீதிலின்று எழிலுறக் காட்சி நல்கும்<br>
ஐயன் தன் கருணையாலே நந்தமிழீழ மக்கள்<br>
அன்பொடு சாந்திபெற்று சுதந்திர வாழ்வு வாழ<br>
மண்ணினை யளந்த மாயன் மைத்துனன்<br>
தன் தாளிணைகள்<br>
நண்ணியே நாமும் சென்று நாடோறும்<br>
வணங்குதுமே.

சோ. இ. [illegible]

இன்று திங்கட்கிழமை கொடியேற்ற நாள்

---

### நாளை

பங்குனி 10

செவ்வாய்க்கிழமை

திதி: ஏகாதசி

மாலை: 5.44 வரை

நட்சத்திரம்: திருவோணம்

முன்இரவு: 8.13 வரை

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 10.46-12.16

ராகு காலம்: 3.16-04.46

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

---

### தவக்கால சிந்தனை

(27 ஆம் நாள்)

இக்காலம் இரக்கத்தின் காலம். ஏக்கங்கள், தாக்கங்கள், தடுமாற்றங்கள், போராட்டங்கள், பாவங்கள், பலவீனங்கள் நிறைந்த மனிதன், அமைதியுறும் ஆசையோடு இறுதி வரை அசைவுறுகிறான், அவனது ஆசைகள் நிராசைகளா? அவனது எதிர்பார்ப்புகள், விருப்பங்கள் நிறைவு பெறுமா? இறைவனின் அருளின்றி இரட்சணியத்தை அனுபவிக்க அவனால் முடியுமா?

'ஆடியடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா' என்று அன்று கவிஞன்பாடினான். ஆனால் இன்று அந்தஆறடி நிலமே இல்லாத நிலையில் இறப்புக்களை எதிர்நோக்கும் சூழலில் வாழ்கின்ற நாம் இறைவனின் இரக்கத்தை நாடி நிற்போம்.

''உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்'' என்ற இயேசுவின் வார்த்தையில் எம் வாழ்வினைக் கட்டி எழுப்புவோம். கடவுள் இரக்கமுள்ளவர், அவருக்குரிய இக்குணம் நமதாக வேண்டும்.

நீ மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் உனக்கு நீயே கொடுத்துக் கொள்வதாகும்.

அருட்திரு.

பி.ஜே.யோகா, அ.ம.தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் பாடத்திட்டத்தை
# சிங்கப்பூர் 30 வீதம் குறைத்தது!

## கல்விச்சுமையை நீக்க நடவடிக்கை

சிங்கப்பூர், மார்ச 23

சிங்கப்பூரில் பாடசாலை மாணவர்களின் பாடத் திட்டம் 10 முதல் 30 வீதம் வரை குறைக்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது.

மாணவர்களின் சுய படைப்புச் சிந்தனையை வளர்க்கவும் கல்விச் சுமைகளைக் குறைக்கவும் இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாணவர்களை அவர்களது ஆற்றல் எல்லைக்கு அப்பால் தள்ளிவிடக்கூடிய அளவில் பெற்றோர்கள் அவர்கள் மீது கல்விச்சுமையை சுமத்துவது சிங்கப்பூரிலும் அதிகரித்து வருகிறது. ஓய்வு இன்றி மாணவர்கள் சுய ஆற்றல்களை இழப்பதாக ஆய்வு ஒன்றின் மூலம் கண்டறிந்த பின்னரே சிங்கப்பூர் கல்வி அமைச்சு இந்த முடிவை எடுத்துள்ளது.

பாடசாலைகளை விட்டு வெளியேறித் தொழிலுக்குச் செல்வோரிடம் சுய ஆர்வமும், அதுபோன்ற ஏனைய திறமைகளும் இல்லாமல் இருப்பதால் தொழில்சார் நிறுவனங்கள் வெளிநாட்டவர்களைப் பணியில் அமர்த்தும் நிலை ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது

இது தொடர்பாக சிங்கப்பூர் கல்வி அமைச்சு பெற்றோர்களுக்கு துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

''படிப்புச் சுமையால் ஏற்படும் அழுத்தத்தை உங்கள் குழந்தை தாங்கிக் கொள்ள உதவுங்கள்'' என்று அந்த துண்டுப்பிரசுரத்துக்குத் தலைப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# உலகில் காசநோய் இவ்வாண்டு தீவிரமாகும்!

நியூயோர்க், மார்ச் 23

முன்னைய ஆண்டுகளை விட இவ்வாண்டு காச நோயினால் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்திருக்கிறது.

சுவாசப்பை, குடல், மூளை ஆகியவற்றைப் பாதிக்கும் இந்நோய், இருமல், துப்பல் ஆகியவற்றினால் தொற்றுகிறது. ஆண்டுதோறும் 30 லட்சம் பேர் இதனால் உயிரிழக்கிறார்கள்.

இந்நோயினால் அதிக எண்ணிக்கையானோர் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் என்பனவும் அடங்கியுள்ளன.

இளையதலைமுறையினரிடையேயும், முதுமையை நெருங்கிக்கொண்டிருப்போர் மத்தியிலும் இந்நோய் பரவலாகக் காணப்படுகிறது. ஏராளமான குடும்பங்களின் பிரதான உழைப்பாளிகளை இந்நோய் காவு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னாசிய நாடுகளின் மொத்த சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினரை காசநோய் பீடித்திருப்பதாகவும், இவர்களில் சுமார் 10 சதவீதத்தினர் இந்நோயினால முழுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்றும் உலக சுகாதார நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார், (ஐ)

# விஞ்ஞானமாணிப் பரீட்சை எழுதும் 10 வயதுச் சிறுவன்!

## பட்னா நீதிமன்றம் அனுமதி

பட்னா, மார்ச் 23

10 வயது மாணவனை விஞ்ஞான மாணி (பி. எஸ். சி) பரீட்சை எழுத அனுமதிக்குமாறு பட்னா உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பட்னா பல்கலைக்கழகத்தின் நடப்பு கல்வி ஆண்டில் விஞ்ஞானமாணி பட்டப்படிப்புக்கான பரீட்சைகளை எழுத அனுமதிக்குமாறு கோரி தாதாகாட் என்ற 10 வயதுச் சிறுவன் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தான். மனுவை விசாரித்த நீதிபதி பி. என். அகர்வால் அச் சிறுவனை பரீட்சை எழுத அனுமதிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

ஏற்கனவே புதுடில்லி உயர் நீதிமன்றின் உத்தரவின் படி இச் சிறுவன் விஞ்ஞான மாணிப் பட்டப்படிப்புக்கான முதல் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டிருந்தான். அந்தத் தேர்வில் அதிக புள்ளிகளை தாதாகாட் பெற்றுள்ளான். (ஐ-10)

# புனித பாப்பரசர் நைஜீரியா விஜயம்

அபிஜான், மார்ச் 23

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நைஜீரியாவில் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் அபிஜான் விமான நிலையத்தில் வந்திறங்கிய பாப்பரசரையும், அவரது குழுவினரையும் அதிபர் ஜெனரல் சாலி அபாச்சாவும் அவரது அமைச்சர்களும் வரவேற்றனர்.

கடந்த பல ஆண்டுகளின் பின் உலகின் முக்கிய மதத் தலைவர் ஒருவர் நைஜீரியா சென்றிருப்பது இதுவே முதன் முறையாகும். பாப்பரசரை வரவேற்ற ஆயிரக்கணக்கான நைஜீரியர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தவாறு விமான நிலையத்துக்கு வெளியே வீதிகளில் திரண்டு நின்றனர்.

மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படும் நாடு என சர்வதேச கண்டனத்துக்கு இலக்காகியுள்ள நைஜீரியாவுக்கு பாப்பரசர் மேற்கொள்ளும் இந்த விஜயம் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது.

அதிபர் ஜெனரல் சாலி அப்பாச்சாவை பாப்பரசர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பாப்பரசரின் விஜயம் ஒரு மதவிவகாரமாக மட்டுமே இருப்பதை நைஜீரிய ஆட்சியாளர்கள் விரும்பினாலும் பாப்பரசர் மனித உரிமை மீறல் விவகாரங்கள் குறித்தும் பேசுவார் என அங்குள்ள கத்தோலிக்கர்கள் எதிர்பார்த்துள்ளனர். (ஐ)

## உலக அரங்கில்

# 14 கிளர்ச்சியாளர் மரணம்

அல்ஜிரியஸ், மார்ச் 23

அல்ஜீரியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் 14 இஸ்லாமியத் தீவிரவாதிகள் அரச படையினரால் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்ப்படுகிறது.

கைவிடப்பட்ட ஒரு வீட்டில் தங்கியிருந்த தீவிரவாதிகளே கொல்லப்பட்டனர்.

# புகை மூட்டம்

ஜகார்த்தா, மார்ச் 23

இந்தோனேசியாவின் கலிமந்தான் மாகாணத்தில் காட்டுத் தீ வேகமாகப் பரவியதால் மீண்டும் மோசமான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

தலைநகரில் இருந்து 125 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பிரதேசத்தில் ஏற்பட்ட இந்தக் காட்டுத் தீயினால் பெரும் புகை மண்டலம் பரவியுள்ளது. இதனால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# நிலத்தடி நீர் அருகி வருவதாக எச்சரிக்கை

நியூயோர்க் மார்ச் 23

உலக நிலத்தடி நீர் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதனை ஒட்டி ஐ.நா. செயலாளர் நாயகம் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

உலகளாவிய ரீதியில் நிலத்தடி நீர் அருகி வருகிறது என்று அவர் அதில் எச்சரிக்கை விடுத்தார்.

பெருகிவரும் மக்கள் தொகை, தொழில் வளர்ச்சி, நகரப் பெருக்கம் ஆகியன நிலத்தடி நீரின் தன்மையையும், அதன் அளவையும் வெகுவாகப் பாதிக்கிறது. இதைவிட நீர் மாசடைதல் மிகப்பயங்கரமாக உருவெடுத்து வருகிறது. நிலத்தடி நீரைத் தூய்மையாக்குவது என்பது மிகக் கடினமனாதாகும் — என்று கோபி அனான் தெரிவித்துள்ளார். (ஐ)

# பசுவைக் கொன்றவருக்கு 12 ஆண்டுகள் சிறை!

## நேபாள நீதிமன்றம் தீர்ப்பு

பசுவைக் கொன்ற ஒருவருக்கு நேபாள மேன் முறையீட்டு நீதிமன்றம் ஒன்று 12 வருடகால சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

இரண்டு வருடங்களின் முன்னர் சோம்லால்தமாங் என்பவர் பசு ஒன்றை கொலை செய்திருந்தார். இதனால் அவருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. அவர் தமக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு நீதியற்றது எனக் கூறி மேன் முறையீடு செய்திருந்தார். அவரது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மேன் முறையீட்டு நீதிபதி சம்பந்தப்பட்டவரது மனுவை நிராகரித்து அவரது தண்டனையை ஊர்ஜிதம் செய்தார்.

நேபாள மக்களின் தேசிய மிருகம் பசு என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-9)

# அமரர் டானியலின் ..

(ஏழாம் பக்கத் தொடர்)

மையக்குறி, இருளின் கதிர்கள் என்பன அவரது குறுநாவல்களாகும்.

யாழ்ப்பாணத் தமிழர் சமுதாயத்தில், காலாகாலமாக ஊறிப்போயிருந்த சாதி மத பேதமாகிய சமூக முரண்பாடுகள் ஒழிக்கப்பட வேண்டும். ''எல்லோரும் வாழ வேண்டும் உலகம் இன்புற்று இருக்க வேண்டும்'' என்ற சமூக சமத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில், அவரது சிந்தனை ஓட்டம் மிகத் துல்லியமாகச் செயற்பட்டது.

அறுபதுகளின் பிற்பகுதியில், அடக்கி ஒடுக்கிப் பிற்படுத்தப்பட்ட மக்களின் விடுதலைக்களமாகிய ''தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம்'' என்ற அமைப்பை உருவாக்கினார். கடைசி வரை அதன் அமைப்புச் செயலராகவே பணியாற்றிப் பல சாதனைகளை நிலைநாட்டினார். வரலாற்றுப் புகழ் மிக்க மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், செல்வச்சந்நிதி முருகன் கோயில், பன்றித்தலைச்சி அம்மன் கோயில், ஆகிய பெரிய கோயில்களில் சத்தியாக்கிரக வழியில் சமத்துவமான வழிபாட்டுரிமையை நிலை நிறுத்தினார்.

இதனை உணர்ந்த கிராமப்புறக் கோயில்களின் நிர்வாகத்தினர் பலர், தத்தம் ஆலயங்களில் சமத்துவ வழிபாட்டுரிமையைத் தாமாகவே முன்வந்து வழங்கினர்.

சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் ஒருங்கிணைந்து உயர்வடைய வேண்டுமென்று கூடும் பிரசார மேடைகளில், அவர் பேசும் போது ''பிறிதுமொழிதல்'' எனப்படும் இலக்கிய அணி ஒடி விளையாடும். சாதி முறைக்கெதிரான கேலியும் கிண்டலும் தர்க்க ரீதியாகத் சாண்டவமாடும்.

அவரது நாவல்களில் விறுவிறுப்பான மொழி நடை, சிலேடையான கருத்துக்கள் ஓடிக் கொண்டிருக்கும். அவர் பஞ்சமர் நாவல் தமிழகத்தில் பெரும் வரவேற்புப் பெற்றது. அதுமட்டுமல்ல கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களினால் ஜப்பானிய மொழியில் மொழில் பெயர்க்கப்பட்டது.

டானியலின் சிந்தனையில் கிளர்ச்சி மிகுந்திருக்கும். அதனால் அவரது நாவல்களைப் படிப்போர், அடிமை, குடிமை முறையில் வாழ்வோர், உணர்வேறிப்புரட்சிச் சிந்தனைக்கு ஆளாகி நிச்சயம் தொழிற்படுவர். சமூக விடுதலை உரிமை பெறுவர்.

பஞ்சப்பட்ட மக்களோடு வாழ்ந்து செயற்கரிய செயல் செய்த டானியல் அவர்களின் நாவல்கள் பிற்படுத்தப்பட்ட மக்களின் வரலாற்று ஆவணங்களாக அமைந்து வாழுமென்பதில் ஐயமில்லை. இலக்கிய கர்த்தாக்களும், ஆர்வலர்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் டானியலை மறக்க மாட்டார்கள்.

- க. கிருஷ்ணபிள்ளை

# நாடாளுமன்றத்தின்....

(3 ஆம் பக்கத் தொடர்)

யில் மக்களைப் பிரித்து வைத்து, தேர்தல் ஆதாயம் கண்டு ஆட்சி செய்கின்றனர். இதனால் நிலையான ஆட்சியில் ஊழலும், ஊழல் இல்லாத ஆட்சிகளில் ஸ்திரமற்ற நிலையும் நிலவி வருகின்றன.

''வாஸ்து சாஸ்திரம்'' என்பது மனையடி சாஸ்திரம், கட்டடங்களை இந்த சாஸ்திரத்துக்கு உட்பட்டுக் கட்டினால் தான் அதில் செய்கிற காரியங்களுக்குப் பயன் கிடைக்கும். இப்போதைய நாடாளுமன்றத்தைக் கைவிட்டு விட்டு, புதியநாடாளுமன்றத்தைக் கட்டுவதுதான் நிலையான, மக்கள் நலன் கொண்ட அரசுக்கு வழிவகுக்கும் என்றும் சந்தோஷ் சிங் தெரிவிக்கிறார்.

இக் கட்சிக்கு வேதத்தில் நம்பிக்கை [illegible] டுள்ளது. (ஐ-10)

# மயானம் இன்றி மக்கள் அவதி

சுழிபுரம், பன்னாகம் பகுதி மக்கள் இறந்தவர்களின் உடலைக் கொண்டு சென்று தகனஞ் செய்ய வாய்ப்பான இடம் இன்றி சுழிபுரம் காட்டுப்புலம் சம்புத்துறை வீதியில் உள்ள தனியார் வளவில் தகனஞ் செய்து வ்ருகின்றனர்.

போக்குவரத்து வசதிகள் குறைவாகவும் தங்குமட வசதிகள் இல்லாமலும் உள்ள அந்த தனியார் வளவில் தண்ணீர் வசதியும் இல்லை.

பணிப்புலம் சந்தை, சில்லாலை, சங்கானை மேற்கு, வடலியடைப்பைச் சேர்ந்தவர்களும் உடல்களை இங்கே தகனஞ் செய்து வருகின்றனர். (ஐ-28)

# கோட்ட மட்ட போட்டி

வடமராட்சி கிழக்கு கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி எதிர் வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-171)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நகரில்

# தெரிவு செய்யப்பட்ட மெய்வன்மை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் நடத்தும் தெரிவு செய்யப்பட்ட மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளுக்கான போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். நகரில் நடைபெறவிருக்கின்றன. இடம்பெறவிருக்கும் நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ ஏழுவகை நிகழ்ச்சி (பெண்களுக்கானது) 100மீற்றர் தடை தாண்டல், 200 மீற்றர், 800 மீற்றர், உயரம் பாய்தல், குண்டெறிதல் நீளம் பாய்தல், ஈட்டி எறிதல்.

★ பத்து வலைப் போட்டி (ஆண்களுக்கானது)— 100 மீற்றர், 110 மீற்றர் தடை தாண்டல், 400 மீற்றர், 1500 மீற்றர், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், தடியூன்றிப் பாய்தல், குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல்.

இந்தப் போட்டிகள் ஒவ்வொன்றிலும் பங்குபற்றுவோர் அப்போட்டியில்உள்ள சகல நிகழ்ச்சிகளிலும் பங்குபற்ற வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் வீரர்கள் பரியும் சாதனைக்கு ஏற்ப புள்ளிகள்வழங்கப்படும். மொத்த நிகழ்ச்சிகளில் அதி கூடிய புள்ளி பெறுவோர் சாம்பியனாகத் தெரிவு செய்யப்படுவர்.

இது தவிர, அஞ்சல் நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. பாடசாலை மற்றும் கழக அணிகள் இந்த அஞ்சல் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற முடியும். நடைபெறும் அஞ்சல் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:-

★ ஆண்கள் அணிகள்:- 4X100 மீற்றர், 4X400, கலப்பு அஞ்சல்.

★ பெண்கள் அணிகள்:- 4X100 மீற்றர், கலப்பு அஞ்சல்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அணிகளும், மெய்வல்லுநர்களும் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர், "சண் தயாளன், யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களையும் சண் தயாளனிடம் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ)

# மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அதிபர்கள் சங்கம் மகஜர்

திருநெல்வேலி, மார்ச் 23

வடமாகாண அதிபர்கள் சங்கம் அண்மையில் யாழ். மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு வந்திருந்த வடக்கு—கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமியை நேரில் சந்தித்து 14 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைக் கையளித்து பேச்சு நடத்தியுள்ளது.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது மகஜரைப் பெற்றுக் கொண்ட கல்விப் பணிப்பாளர் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் பற்றி திருகோணமலை சென்றதும் ஆராய்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுவதாக சங்கப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார்.

இம் மகஜரில் இடம்பெற்றுள்ள முக்கிய கோரிக்கைகள் வருமாறு:-

★ தமிழ்த்தினப் போட்டிகளுக்கு நடுவர்கள் நியமனம் செய்யப்படும் போது கண்ணியமாக நியமிக்கப்படுவதுடன் போட்டி விதிகள் கண்டிப்பாக அனுசரிக்கப்பட வேண்டும்.

★ விளையாட்டுப்போட்டிகள், தமிழ்த்தினப் போட்டிகள் போன்றவற்றிக்கு மாகாணக் கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்யும் போது கோட்டமட்டப் போட்டிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

★ ஜி.சீ.ஈ. சாதாரண, உயர்தர வகுப்பு ஆசிரியர்களுக்கும்சித்திரபாடம் உடற்பயிற்சி ஆகிய துறைகளுக்குமான ஆசிரியர்களுக்கும் யாழ். மாவட்டத்தில் நிலவி வரும் ஆசிரியர் பற்றாக் குறை உடன் நீக்கப்பட வேண்டும்.

★ 1995 ஆம் ஆண்டு அதிபர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைகளை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும்.

★ ஓய்வுபெறும் அதிபர்களின் ஓய்வூதியமும், திரட்டிய மாற்று ஓய்வூதியமும் வழங்கப்படுவதில் ஏற்படும் நீண்டகால தாமதம் நீக்கப்பட்டு விரைவில் இவற்றை வழங்க ஆவன செய்யப்பட வேண்டும்.

★ 49/89 இலக்க சுற்றறிக்கையின்படி அரச ஊழியர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் திட்டத்தின் கீழ் சங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட நஷ்ட ஈட்டுக்கான விண்ணப்பங்கள் பல மேலிடத்திற்கு அனுப்பி வைக்கப் படாது மாகாணசபையில் தேங்கிக் கிடப்பதாக அறியப் படுகின்றது. இவற்றை விரைவில் மேலிடத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★ யாழ்ப்பாணத்தில்ஆரம்பிக்கவிருக்கும் கல்வியியல் கல்லூரியைத் தற்காலிகமாக ஓர் இடத்தை இப்போதைக்குத் தெரிவு செய்து இவ் வருடமே ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★ இடம்பெயர்ந்துஇயங்கி வரும் பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

★ வலயம் இரண்டுக்கு உடற்கல்வி பணிப்பாளர் பதவி வெற்றிடமாக உள்ளது. விரைவில் உடற்கல்விப் பணிப்பாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஐ-135)

# தொண்டு அமைப்புடன் இணைந்து செயற்படுவதை அரசு விரும்பவில்லை

## ஐ. நா. அபி. திட்ட ஆலோசகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

அரசும் அரச படைகளும் நாம் யாழ்ப்பாணத்திலுள்ள தொண்டர் நிறுவனங்களுடன் இணைந்து வேலை செய்வதை விரும்பவில்லை.

இவ்வாறு ஐ. நா. அபிவிருத்தித் திட்ட மனித நேய ஆலோசகர் பற்றிக் வென்டென்புறோனி யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய பிரதிநிதிகளோடு நடத்திய சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களோடு இணைந்து செயற்பட முடியாமையினால் எமது வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

அரசுடன் தொடர்பு கொண்ட பின்னர் தான் தொண்டர் நிறுவனங்கள் மக்களுக்கு உதவ வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார் — என்றும் புறோணி கூறினார்.

இந்தச் சந்திப்பு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய பணிமனையில் நடைபெற்றது.

இணையத்தின் சார்பில் தலைவர் சு. பரமநாதனும், செயலாளர் எஸ். சிவசுப்பிரமணியமும் கலந்து கொண்டனர்.

யாழ். நிலைவரங்கள் பற்றி ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரிக்கு விரிவாக இணையப் பிரதி நிதிகள் எடுத்துக் கூறினர் எனத் தெரிகிறது.

(இ-5)

## பண்டாவுடன்...

(7 ஆம் பக்கத் தொடர்)

காக்க வேண்டும் 'என்பதாகும்.

தந்தை செல்வா அவர்களாலும் தமிழ் பேசும் இனத்தாலும் முன் வைக்கப்பட்ட நீதியான மிகவும் எளிதான கோரிக்கைகளை எல்லாம் அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசுகள் அனைத்தும் உதறித் தள்ளியபோது அவர் கூறிய வார்த்தைகள் இன்றும் எனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அதன் சாராம்சம் இதுவாகும்:

இன்று நாங்கள் கேட்பவற்றை நீங்கள் தர மறுக்கின்றீர்கள். இவற்றைப் பின் ஒரு சமயம் நீங்கள் தருமாகவே தர முன் வந்தாலும் அவற்றை எமது வருங்கால சந்ததியினர் ஏற்க மறுக்கின்ற ஒரு காலமும் வரும் என்பதுதான்.

### கடமையிற் கண்

நாடாளுமன்றத்தில் நான் கடமையாற்றுகையில் தந்தை செல்வா அவர்களிடம் கண்டுகொண்ட பல முக்கியமான பண்புகளில் ஒன்று, அவர் தமது இறுதிக் காலத்திலும், தள்ளாத வயதிலும், நடக்க முடியாத நிலையிலும், குரலில் சக்தி குறைந்த போதிலும், கொடும் குளிரோ, மழையோ புயலோ, காற்றோ அவைகளைப் பொருட்படுத்தாமல் அவர் ஒழுங்காக நாடாளுமன்றக் கூட்டங்களுக்கு வந்து சபையில் அமர்ந்திருந்து தமது கடமைகளைக் கண்ணுங் கருத்துமாக நிறைவேற்றியதுதான்.

### தியாகங்கள் நிறைந்தவழி

வாழ்நாள் முழுவதும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் ஒரு சட்ட மேதையாக விளங்கியவர். அவர் விரும்பியிருந்தால் நீதித்துறையில் உயர் நீதிமன்ற நீதியரசராகப் பதவி பெற்றுப் பிரதம நீதியரசராகக் கூட உயர்ந்திருக்கலாம். ஆனால் அவர் தேர்ந்தெடுத்த வழியோ இலங்கைத் தமிழ் பேசும் இனத்தின் பால் தியாகங்கள் நிறைந்த ஒன்றாக அமைந்து விட்டது. அதனாலன்றோ அவரை இலட்சோப இலட்சம் மக்கள், பெரியவர், தியாகி, தந்தை, ஈழத்துக் காந்தி எனப் போற்றலாயினர்.

ஈழத் தமிழர்கள் வாழும் வரை பெருந் தலைவர் தந்தை செல்வநாயகத்தையும் அவர்தம் அரசியல் நெறியையும்மறந்து விடலாகாது; மறந்துவிட முடியாது.

★

(முற்றும்)

# வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். கல்வி வலயம் — 1 நடத்தும் வலைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இன்று காலை நடைபெறும் என அறிவிக்கப்பட்ட போட்டிகள் இன்று மாலை 3.00 மணிக்கு குறித்த பாடசாலை மைதானங்களில் நடைபெறும் என்று வலயம் — 1 உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரி ராஜா அறிவித்துள்ளார்.

(இ-3)

# நோயாளியின் பணம் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சை வார்ட் பகுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளி ஒருவரின் பையில் இருந்த 5 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

நோயாளி பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் முறையிட்டுள்ளார். எனினும் பணத்தை இதுவரை மீளப் பெறமுடியவில்லை. (இ-139)

# சமயம்

கொழும்புத்துறை, மார்ச் 23

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலயத்தில் இன்று 2 ஆவது பங்குனித் திங்கள் நண்பகல் 11- 30 மணிக்கு விசேட அபிஷேகம். பூசை வழிபாடுகளும், அடியார்களின் பொங்கல் வைபவத்துடன் இடம்பெறவுள்ளன.

(ஐ-30)

★ ★ ★

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேகம், பங்குனித் திங்கள் பூசையும் ஆரம்பமாகி நடைபெறும்.

(ஐ-30)


UNIVERSITY OF JAFFNA

**TENDER NOTICE**

The Chairman Tender board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with ICTAD for Civil Engineering works or Multi Purpose Co-operative Socities for the Improvements/External Painting to Artscomplex / Selvanayagam block.

Tender forms may be obtained from the Works Engineer ( civil ), University of Jaffna until 30 - 03 - 1998 on producing Registration book and cash payment of the following tender fees at the Shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit — Rs. 5, 000
2. Non -refundable - deposit — Rs. 250

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box, kept at the Registrar's Office, University of Jaffna on or before 09-04-98 at 10. 00 a. m.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Maintenance Branch of this University during office hours if necessary.

Dr. K. Kunarasa
Registrar

University of Jaffna.
P. O. Box 57,
Thirunelvely,
Jaffna.

(C/3178)





"கைப்போது மலர்தூவி காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்து தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்னகத்தே வைத்தேனே"



இன்று (23-03-98) நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்

**யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய**

மஹோற்சவத்தை முன்னிட்டு இப்பதிகம் பிரசுரிக்கப்படுகின்றது.

539, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(54248)

கனகசபை தர்மகுலசிங்கம்
''பழமுதிர்சோலை'', காரைநகர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இனப் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்)

மான எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

தொண்டமானின் பேட்டி கேள்வி — பதில் வடிவத்தில் கீழே தரப்பட்டுள்ளது.

கேள்வி: வடக்கு — கிழக்கு மாகாணம் 5 வருட காலத்துக்கு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அதன் தலைவர் வே. பிரபாகரன் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என்றும் நீங்கள் அண்மையில் கூறி இருந்தீர்கள். அதனை எந்த அடிப்படையில் கூறினீர்கள்?

பதில்: தற்போதைய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியடைந்துவிட்டது. பண்டா—செல்வா ஒப்பந்தம் கூட தோல்வியடைந்திருந்தது. தோல்விகளைச் சந்தித்ததன் பின்னர் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள தமிழ்ப் பிரிவினர் ஏமாற்றம் அடைந்து அரசாங்கங்களின் தலைமைத்துவத்தில் நம்பிக்கை இழந்தனர். இதன் விளைவாக தமிழ்க் கட்சிகள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை இயற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

கடந்த 50 வருட காலத்தில் அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் நடத்தைகள் ஒவ்வொவையாக, கெடுதலானவையாக அமைந்தன. இதன் விளைவாக தெற்கிலும் வடக்கிலும் இளைஞர் புரட்சிகள் வெடித்தன. சிங்களத் தலைமைத்துவங்கள் இந்த நாட்டை ஆண்ட விதம் சிறுபான்மையினரின் நம்பிக்கையைப் பெறுவதாக அமையவில்லை. இதன் விளைவாக ஜனநாயகத் தமிழ்க்கட்சிகள் தனிநாடு கேட்கும் நிலை உருவானது.

இப்போது அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் நாட்டின் அரைப் பங்கைப் பிரித்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க முடியாது. எனவே சமாதானத்தைக் காண்பதற்கு ஏதோ ஒரு வழியைக் கண்டு பிடித்தாக வேண்டும்.

எனக்கு நாடாளுமன்றத்தில் வாக்கு இல்லாத போதிலும் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா என்னை அழைத்து அமைச்சர் பதவி தந்தார். அதனால் அமைச்சரவை முழுவதையும் என்னிடம் ஒப்படைத்தார் என்று அர்த்தமாகியதா? இதனை எங்களுடைய மக்கள் விளங்கிக் கொள்கிறார்கள் இல்லை. அவர் என்னை நல்மனதோடு அழைத்தார்; நான் ஏற்றுக் கொண்டேன். அதன் மூலம் எனக்குப் பொறுப்புணர்ச்சி ஏற்பட்டது.

அவ்வாறே அரசாங்கம் குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு பிரபாகரனை வடக்கு- கிழக்கின் ஆளுநராக்கலாம். அப்போது அவரது பொறுப்புணர்வு அதிகரிக்கும். பிரபாகரன் வடக்கு — கிழக்கின் ஆளுநராகப் பிரகடனப்படுத்தப்பட்டு இந்த நாட்டின் ஜனாதிபதிக்குரிய சகல அதிகாரங்களும் அவருக்கு வழங்கப்பட வேண்டும்.

கேள்வி: வடக்கு-கிழக்கை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்த பின்னர் அடுத்தபடியாக என்ன செய்ய வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்: பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் சீன அரசாங்கத்துக்கும் இடையில் இருந்த ஒப்பந்தம் முடிவுற்றதும் அதன் பின்னர் ஹொங்கொங்குக்கு என்ன நடந்தது? அவர்கள் இணக்கம் ஒன்றுக்கு வரவில்லையா? ஹொங்ஹொங் சீனாவிடம் திருப்பி ஒப்படைக்கப்படவில்லையா? ஆகையால் அதனை போன்று ஓர் ஏற்பாடு இங்கும் நடைபெறட்டுமேன்.

சில காலங்களின் பின்னர் இணங்கப்பட்டவாறு வடக்கு — கிழக்கைப் பிரபாகரன் திருப்பி ஒப்படைக்கட்டும். இவ்விடயத்தில் கொடுத்து வாங்கும் கொள்கை இருக்க வேண்டும்.

பிரபாகரன் வடக்கு — கிழக்கைத் திரும்ப ஒப்படைத்ததும் இயல்பாகவே அந்தப் பகுதி அரசின் ஆட்சிக்கு உட்பட்டுவிடும்.

கேள்வி: ஜனாதிபதி சந்திரிகா கூட வெளிநாட்டுச் சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், வடக்கு — கிழக்கைப் பிரபாகரனிடம் 10 வருடங்களுக்கு ஒப்படைப்பது குறித்து ஆலோசித்திருந்ததாகத் தெரிவித்தார். ஆனால் அது குறித்துக் கண்டனங்கள் வந்ததும் தாம் அதனைப் பகிடிக்குக் கூறியதாகத் தெரிவித்துவிட்டார். நீங்கள் இது விடயத்தில் எந்தளவுக்கு அக்கறையாக உள்ளீர்கள்?

பதில்: என்னைப் பொறுத்தமட்டில் நான் சொல்வது குறித்து நான் மிகுந்த அக்கறை உடையவன். ஆனால் ஜனாதிபதியைப் பொறுத்தமட்டில் அது ஒரு பகிடி. இதனாலேயே சிறுபான்மை மக்கள் சிங்கள அரசாங்கங்கள் மீது சந்தேகம் கொண்டவர்களாக விளங்குகிறார்கள். வடக்கு—கிழக்கு மாகாண மக்கள் இன்னல்படுகின்றார்கள் என்பதற்காக மட்டுமன்றி இந்த நாட்டு மக்கள் அனைவரதும் நன்மை கருதியே நான் இந்த யோசனையில் அக்கறை கொண்டுள்ளேன்.

கேள்வி: ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாகக் கருதாது இருக்கும் வேளையில் வடக்கு — கிழக்கைப் புலிகளிடம்ஒப்படைப்பது என்பதுநியாயமானதா?

பதில்: நியாயமாகவும் இருக்கலாம். நியாயமற்றதாகவும்இருக்கலாம். ஆனால் இனப்பிரச்சினை விடயத்தில் பேச்சுவார்த்தை நடத்த அரசு இப்போது ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. அதற்குக் காரணம் விடுதலைப்புலிகளேஅன்றி தமிழ்க் கட்சிகள் அல்ல. இப்போது என்னுடைய கேள்வி என்னவென்றால் ஏனைய தமிழ்க் கட்சிகள் இதுவரை என்ன செய்தன? இனிமேலும்என்ன செய்ய முடியும்? தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற ஜனநாயகக் கட்சியேவட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் பங்கு கொண்டுவிட்டு அதன் பின்னர் இந்தப் பிரச்சினையில் இருந்து விலகிவிட்டது. இந்தப் பிரச்சினையைத்தீர்ப்பதற்கு அனைத்துதமிழ்க்கட்சிகளும் எதுவுமே செய்யவில்லை.

கேள்வி: ஏனைய கட்சிகளைவிட விடுதலைப்புலிகள்அதிகமாகச் செய்வார்கள் என்பது தான் உங்களது கருத்தா?

பதில்: அவர்கள் ஏற்கனவே ஏனைய அரசியல்கட்சிகளைவிட மிக அதிகமாகச் செய்துவிட்டார்கள். வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் விடுதலைப் புலிகள் செயற்பட்டது போல் வேறு எந்த தமிழ்க் கட்சி இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு காத்திரமான- உறுதியான நடவடிக்கையை எடுத்தது என்று சொல்லுங்கள் பார்க்கலாம்?

தமிழர்பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கத்தைப் பேச வைத்த ஒரே ஒருகட்சிதமிழீழ விடுதலைப்புலிகளே; ஏனைய கட்சிகள் அல்ல. என்னைப் பொறுத்தமட்டில்விடுதலைப் புலிகள் தான் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளா? இல்லையா? என்பதைதீர்மானிப்பது எனது வேலையல்ல. எனக்கு வேண்டியது எல்லாம் அமைதியே.

கேள்வி: விடுதலைப் புலிகளேதமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கருதுகிறீர்களா?

பதில்: என்னுடைய ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டால் இந்தக் கேள்வி எழமாட்டாது. அவர்களே தமிழர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கக்கூடியவர்கள்.

கேள்வி: இந்தப் பிரச்சினையை அரசாங்கம் எவ்வாறு தீர்க்க முடியும் என்பதனைச் சுருக்கமாகக் கூறுவீர்களா?

பதில்: இந்த நாட்டிலே நாங்கள் இரண்டு பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ளோம். ஒன்று இனப்பிரச்சினை; அடுத்தது பிரஜா உரிமைப் பிரச்சினை. பிரஜா உரிமைப் பிரச்சினையை நான் வெற்றிகரமாக கையாண்டு விட்டேன். நான் எப்போதும் செயற்பாட்டில் நம்பிக்கையுள்ளவன்; நான் வெறுமனேபேசுபவன் அல்லன். இந்த நாட்டின் ஜனாதிபதிக்கு இந்தப் பிரச்சினையில் எனது நிலைப்பாடு என்ன என்பதை தெரிவித்து விட்டேன். சிங்களவர்களின் நிர்வாகத்தில் தமிழர்களுக்கு நம்பிக்கையில்லை. மறுபுறத்தில் தமிழர்களுக்காக தனிநாடு ஒன்றை அரசாங்கம் பிரித்தெடுக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது. இதனாலேயே ஹொங்கொங்—சீனா முறையை இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக பரிசீலனை செய்ய வேண்டும் என்றுநான் சொல்கிறேன். ஹொங்கொங் வித்தியாசமான அரசியல்சித்தாந்தமுடைய சிறிய பிரதேசம் ஆகும். ஆனால் ராட்சத சீனா ஒரு சோசலிஷ நாடாகும். அப்போது இரண்டு சித்தாந்தங்களும் ஒரே சக்தியாக இணைந்திருப்பதைப் பார்க்கிறோம். அதே போன்று நாமும் இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தற்காலிகமாக இணைந்துள்ள வடக்கு— கிழக்கை அடிப்படையாக வைத்து ஒரு வழிமுறையை உண்டாக்கலாம்.

கேள்வி: உங்களுடைய சித்தாந்தம் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தீர்வுப் பொதிக்கு முரணானதுஎன்று நீங்கள் கருதவில்லையா?

பதில்: இப்போதையதீர்வுப் பொதி அதிகாரப்பரவல் அலகு என்ன என்பதனை உள்ளடக்கவில்லை. ஆனாலும் இந்தத் தீர்வுப் பொதி இந்த அரசாங்கத்தின் ஒரு துணிகரமான முயற்சி ஆகும். வேறு எந்த அரசாங்கமும் இது போன்ற ஒரு தீர்வுப் பொதியை முன்வைத்திருக்கவில்லை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக நிர்வாக அலகு சம்பந்தமாக முரண்பட்ட அக்கறைகள் காணப்படுகின்றன. ஆனால் இந்தத்தீர்வுப்பொதியிலும் குறைபாடு உண்டு.

கேள்வி: தீர்வுப் பொதி ஒன்றின் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் ஐ. தே. கவின் பங்கு என்ன என்று கருதுகின்றீர்கள்?

பதில்: இதில் நான் என்ன கூறமுடியும் என்றால், அவர்கள் எதிர்க்கட்சியோ இல்லையோ அவர்கள் சிங்களவர்கள். அதனால் நம்பிக்கையுடன் செய்யப்படும் எதனையும் அவர்கள் எதிர்ப்பார்கள். (அ-இ-9-10)

## 1,500 தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

இவர்களில் 10 பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். ஏனையோர் அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த போதும், நேற்று மாலை ஒரு பகுதியினர் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்களின் உறவினர்கள் தமது உடன் பிறப்புக்களை பார்க்க ஆயிரக்கணக்கில் பொலீஸ் நிலையம் முன்பாகக் கூடிநின்றனர்.

பம்பலப்பிட்டியில் உள்ள விடுதிகளும் சுற்றி வளைக்கப்பட்டு ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். (இ-3)

## வண்ணை சிவன் கொடியேற்றம்

யாழ்ப்பாணம். மார்ச் 23

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று ங்கள் முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

மகோற்சவ தினங்களில் காலைத் திருவிழா 9 மணிக்கும், மாலைத்திருவிழா பிற்பகல் 4. 30 மணிக்கும் வசந்த மண்டபப்பூஜையுடன் ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-7)

## வரப்பிரகாஷ்...

(முதலாம் பக்கத் தொடர்)

பேரையும் கைது செய்தனர்.

கண்டி மாஜிஸ்திரேட் நீதிவானும், பிரதம நீதிவானுமாகிய திருமதி டி. சி. மிறிஞ்சி ஆராச்சி முன்னிலையில் அவர்கள் ஆஜர் செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைகப்பட்டு வந்தனர்.

முதலாவது சந்தேக நபரான சிரேஷ்ட மாணவன் பி. ஜி. சதிஸ்கரன் தலைமறைவாகவே இருந்து வருகிறார்.

விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த ஏழு சந்தேக நபர்களையும் பிணையில் விடுமாறு கோரி எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் கண்டி உயர் நீதிமன்றத்தில் பிணை மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

நீதிவான் முன்னிலையில் இது வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நீதிவான் எதிரிகள் ஏழு பேரையும் தலா 10,000 ரூபா ரொக்கப் பிணையிலும் 20,000 ரூபா சரீரப்பிணையிலும் செல்ல அனுமதித்ததுடன் இரண்டு வாரத்திற்கொருமுறை கண்டி தலைமை பொலிஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டுமென உத்தரவிட்டதுடன் எதிர்வரும் 25 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார். (இ-10)

## குண்டு பொருத்திய....

(முதலாம் பக்கத் தொடர்)

செல்ல முற்பட்ட ஒருவர் மட்டக்களப்பு சியாம்பலாண்டுவ சோதனைச்சாவடியில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த மோட்டார் சைக்கிளில் 15 கிலோ சீ 4 ரக வெடிமருந்து சாதுரியமாகப் பொருத்தப்பட்டிருந்தது என்றும் —

இந்த மோட்டார் சைக்கிளை இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் கொழும்புக்குக் கொண்டு வந்துள்ளனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த மோட்டார் சைக்கிளைப் பழுகாமத்தில் உள்ள விடுதலைப் புலிகள் முகாம் தலைவர் தம்மிடம் ஒப்படைத்ததாகவும் —

இதைக் கொழும்பு, செட்டித்தெருவில் உள்ள ஒருவரிடம் ஒப்படைக்கும்படி தாம் பணிக்கப்பட்டிருந்ததாகவும் — மோட்டார் சைக்கிளுடன் கைதான நபர் தெரிவித்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இத்தகவலையடுத்து, செட்டித்தெருவில் உள்ள் நபரைத் தேடிப் பொலீஸார் வலைவிரித்துள்ளனர். (இ103.9)

## 117 வெளிநாட்டவருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

பங்களாதேஷ், இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து சிங்கப்பூர் சென்ற 300 வெளிநாட்டவர்களில் இந்த சட்டவிரோத குடியேறிகளும் அடங்கி இருந்தார்கள்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நேற்று முன்தினம் சிங்கப்பூர் நீதிமன்றம் ஒன்றில் விசாரிக்கப்பட்டே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

பெண் குற்றவாளிகளுக்கு கசையடித் தண்டனையில் இருந்து நீதிமன்றம் விலக்கு அளித்தது. (இ-9)

## பென்ஸ் கார்...

(முதலாம் பக்கத் தொடர்)

தார்.

இந்தச் சந்திப்பின்போது அஸ்கிரிய மகாநாயக்கருக்கும் பென்ஸ் கார் ஒன்று வழங்க ஏற்பாடாகியிருந்தது. எனினும் அவர் இந்த வைபவத்தில் பங்குபற்றவில்லை.

இந்த வைபவத்தின் பின்னர் கருத்துக்கூறிய மல்வத்த மகாநாயக்கர், ''எனக்கு 10 பென்ஸ் கார்கள் வழங்கினாலும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைக்கு எதிரான எனது பாதையில் மாற்றம் இருக்காது'' என்று தெரிவித்தார். (இ-3)

INSTITUTE OF INFORMATICS STUDIES

COMPUTER COURSES

புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

விவரங்களுக்கு:

Director-

IIS, 68, Clock Tower Road, Jaffna.

IIS, Navalar Madam, Karaveddy.

(C/3179)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org